பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 13 வெள்ளிக்கிழமை 29.07.2022 கதிர் 266

### இனி அது ரகசியம் அல்ல!

பாவம் சுமந்திரன் எம்.பி.

அவருக்குத் தொல்லை அதிகரிக்க போகின்றது.

இப்போது ஜனாதிபதி சட்டத்தரணியான அவர் அரசியலுக்கு வந்த பின்னர் பல வழக்குகள் – பெரும்பாலும்பலநூற்றுக்கணக்கில் – ஓசியில் பேச

☞2

# சக எம்.பிக்களே தமிழ் கூட்டமைப்பை மலினப்படுத்துவதா என சித்தர் சீற்றம்!

## பணம் பெற்று வாக்களித்த குற்றச்சாட்டு அபாண்டம் என அவர் அடியோடு மறுப்பு

(கலையமுதன்)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சக நாடாளுமன்ற உறுப்பினர்களே தமிழ்த் தேசிய கூட்டமைப்பை மலினப்படுத்துவதை ஏற்கமுடியாது என புளொட்டின் தலைவரும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

சமகால நிலைமைகள் தொடர்பாக கந்தரோடையிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேய அவர் இதனைத் தெரிவித்தார்.

☞4



## வடக்கின் இரண்டு மூத்த செயலாளர்களை வெளியேற்றும் ஆளுநருக்கு எதிராக ஜனாதிபதியிடம் டக்ளஸ் முறையீடு!



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூலை 29

வடக்கு மாகாணத்தின் இரு மூத்த செயலாளர்களை மாகாணத்திற்கு வேண்டாம் என ஆளுநர் ஜீவன் தியாகராஜா கடிதம் வழங்கியமையக் கண்டித்தும் ஆட்சேபித்தும் ஜனாதிபதியின்

☞2



## கடன் மறுசீரமைப்புக் குறித்து சீனாவுடன் பேசுமாறு கோருகின்றது நாணய நிதியம்

இலங்கை அதன் பாரிய கடன் வழங்குநரான சீனாவுடன் கடன் மறுசீரமைப்பு பேச்சு வார்த்தைகள் குறித்து தீவிரமன கலந்துரையாடலில் ஈடுபட வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

நிதியத்தின் ஆசிய மற்றும் பசிபிக் திணைக்களத்தின் பணிப்பாளர் கிருஷ்ணா சீனிவாசன், றொய்ட்டர்ஸுக்கு அளித்த பேட்டியிலேயே இவ்விடயத்தை தெரிவித்துள்ளார்.

ஆறு முறை பிரதமராக இருந்த ரணில்

☞2

## போராடிய ஆர்ப்பாட்டக்காரர்களை காப்பாற்ற மக்கள் முன்வர வேண்டும்

### இறைஞ்சுகின்றார் சுமந்திரன் எம்.பி.

நாட்டை மீட்பதற்கு போராடிய ஆர்ப்பாட்டக்காரர்களை மக்கள் காப்பாற்ற முன்வரவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் அரசின்

☞2



## விமானப் படைச் சிப்பாயின் கடத்தல் நாடகம் அம்பலம்!

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள ரிதிதென்னை பகுதியில் விடுமுறைக்கு வீடு சென்று திரும்பிய விமானப்படைச் சிப்பாய் ஒருவர் கடன் பிரச்சினை காரணமாகத் தான் கடத்தப்பட்டு காட்டு பகுதியில் கட்டிவைக்கப்பட்டுள்ளார் எனக் கூறி நாடகமாடியுள்ள சம்பவம் அம்பலத்துக்கு

☞2




## போராட்டம் நடத்திய இளைஞர்களின் கோரிக்கையை ஏற்கின்றாராம் ரணில்

நாட்டின் அமைப்பை மாற்ற வேண்டும் என்பதே போராட்டத்தில் ஈடுபட்டிருந்த இளைஞர்களின் கோரிக்கையாக இருந்தது. அதனை நாமும் ஏற்றுக்கொள்கிறோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் புறக்கோட்டையில் உள்ள

☞2






## வெளிநாடு செல்ல 21பேருக்குத் தடை

தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தனிஷ் அலி உள்ளிட்ட 21 பேருக்கு வெளிநாடு செல்வதற்கு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் தடைஉத்தரவு பிறப்பித்துள்ளது.

வசந்த முதலிகே, ஜோசப் ஸ்டாலின், லஹிரு வீரசேகா. எரங்க குணசேகர

☞4

## நாடாளுமன்றம் இடைநிறுத்தம்

நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்குவரும்வகையில் நாடாளுமன்ற அமர்வை நிறைவு செய்யும் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்றிரவு வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, நாடாளுமன்றத்தின் அடுத்த அமர்வு ஓகஸ்ட் 3ஆம் திகதி காலை

☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வேண்டிய கட்டாயம். தாம் சார்ந்த கூட்டமைப்பின் வழக்குகள் மட்டுமல்ல, கூட்டமைப்பின் ஆதரவாளர்கள், தமிழர் நலன் சார்ந்த பொது வழக்குகள் என்று ஒரு நீண்ட பட்டியல் உண்டு.

அவர் அரசியலுக்கு வர முன்னரே, யுத்த காலத்தில் நான் கடத்தப்பட்டு, பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் தடுப்பு காவலில் வாடியபோது, அப்போது என்னுடன் முகப் பரிச்சயம் கூட இல்லாத சுமந்திரன், எனக்காகக் கட்டணம் எதுவுமே வாங்காமல், உயர்நீதிமன்றத்தில் முன்னிலையாகி வாதிட்டவர்.

தம்மைத் தாறுமாறாகத் தாக்கி இப்போது எழுதும் ஊடகத்தின் சார்பில் ஏற்கனவே ஓஸியில்வாதாட ஏற்றுக்கொண்டு விட்ட பல வழக்குகளை, சட்டத்தரணி தர்மத்தின்படி முகம் சுளிக்காமல் இப்போதும் தொடர்ந்து ஓஸியில் நடத்தி வருபவர் சுமந்திரன்.

தற்போது கொழும்பு காலி முகத்திடல் போராட்டக்காரர்களை – 'அறகலிய' போராளிகளை – கைது செய்யும் படலத்தை ரணிலின் அரசு ஆரம்பித்திருக்கின்றது. அதற்கு எதிராக சுமந்திரன் குரல் எழுப்பி வருகின்றார்.

இனி என்ன? அந்தப் போராளிகளை உசுப்பேத்தி விட்ட தார்மீகத்தின் அடிப்படையில், அவர்களின் வழக்குகளுக்கும் ஓஸியில் அவர் முன்னிலையாக வேண்டி இருக்கும்.

அரசியல் என்றாலே சிக்கல்தான்...!

★ ★ ★

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு சிங்கப்பூரில் ஆக 14 நாள்கள் விசா அனுமதி மட்டும்தான் உண்டு, அவர் இந்த மாதம் முடிவில் சிங்கப்பூரை விட்டு வெளியேற வேண்டி இருக்கும் என்று ஊடகங்கள் எல்லாம் செய்தி வெளியிட, இல்லை, இன்னும் இரண்டரை மாதங்கள் வரை அவர் அங்கு தங்கி இருக்கலாம், அதற்கு அனுமதி கிட்டும் என்று கடந்த வாரத்திலேயே என் பத்தியில் நான் தெட்டத் தெளிவாகக் கோடி காட்டி இருந்தேன். வாசகர்களுக்கு அது நினைவில் இருக்கக் கூடும்.

இப்போது அவருக்கு இரண்டாவது 14 நாள் விசாநீடிப்பு வழங்கப்பட்டுள்ளதாக செய்திகள் வந்துள்ளன. இன்னும் இரண்டு மாதங்களுக்கு அத்தகைய விசா நீடிப்பு சிங்கப்பூரில் தமக்கு கிட்டும் என்ற உறுதியில் கோட்டாபய அங்கு தங்கி இருக்கிறார். அங்கிருந்த படி பெரும் அரசியல் நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளாமல் அவரும் அவரது மனைவியும் அங்குதங்கியிருப்பதற்கு எந்தத்தடையும் இப்போது கிடையாது.

ஜனாதிபதியாக முன்னரே சிங்கப்பூருக்கு சென்று அங்குதான் தமது இருதய சத்திர சிகிச்சை செய்து கொண்டு இலங்கை மீண்டிருந்தார் கோட்டாபய.

ஜனாதிபதியாக இருந்த போதும் கூட ஓரிரு தடவை சிகிச்சைக்காக அவர் சிங்கப்பூர் சென்று வந்திருந்தார்.

சிங்கப்பூரைப் பொறுத்தவரை அந்த நாட்டின் மருத்துவ சேவையை ஒழுங்காக பெறும் வெளிநாட்டு நோயாளி அவர்.

மூன்று மாதத்தின் பின்னர் ஏதேனும் வைத்திய நிலைமை கருதி அவருக்கு மேலதிக விசா வழங்கப்பட வேண்டுமாயின் அதை வழங்கவும் சிங்கப்பூர் தயாராக உள்ளது என தெரிகின்றது. தனது மண்ணிலிருந்து கோட்டாபய ராஜபக்ஷ அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடாத வரை – அவருக்கு எதிராக சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடிய சட்ட ஆணையம் கிட்டாத வரையில் – அவர் தொடர்பில் எந்தத் தீவிர நடவடிக்கையும் சிங்கப்பூர் எடுக்காது என நம்பகரமாக அறிய வருகிறது. சத்தம் இல்லாமல் இருந்தால் கோட்டாபய சிங்கப்பூரில் தாக்குப் பிடிக்க முடியும் என்பதுதான் நிலைமை.

– மின்னல் –

## வடக்கின் இரண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செயலாளருக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவசர கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

வடக்கின் மூத்த செயலாளர்களான இ.இளங்கோவன் மற்றும் செந்தில்நந்தனன் மற்றும் விவசாயப் பணிப்பாளர் சிவகுமார் ஆகிய மூவரையும் ஜீவன் தியாகராஜா தூக்கியெறிந்தமை ஒரு தவறான முன்னுதாரணம் எனவும், குறிப்பாக மாகாணத்தில் உள்ள மூத்த அமைச்சரான தனது ஆலோசனையைக் கூடப் பெற்றுக்கொள்ளாது, நிர்வாக நடைமுறைக்கு முரணாக, மேற்கொண்ட இந்த விடுவிப்பு உத்தரவுகள் உடன் இரத்துச் செய்யப்பட வேண்டும் எனவும் அவசர கோரிக்கை அவரால் எழுத்தில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஒரே தடவையில் அதிக அதிகாரிகளை மாகாணத்திற்கு வெளியே அனுப்புவது மாகாணத்தின் பணியைப் பாதிக்கும் செயல் என்பதோடு, ஏனைய அதிகாரிகளையும் மனதளவில் பாதிக்கும் செயலாகவும் அமையும். நாடளாவிய சேவை உத்தியோகத்தர்களை இடமாற்ற பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு பரிந்துரைக்க முடியுமேயன்றி ஆளுநர் நேரடியாக இடமாற்றக் கடிதம் வழங்க முடியாது என்பதனையும் கருத்தில் கொள்ளுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியின் செயலாளருக்கு நேரடியாகத் தொலைபேசியிலும் தெரிவித்துள்ளார்.

இவற்றை உடன் கவனத்தில் எடுப்பதாக ஜனாதிபதியின் செயலாளர் பதிலளித்துள்ளமையால் ஆளுநர் ஜீவன் தியாகராஜாவா, நிர்வாக நடைமுறையா என்ற போட்டி எவ்வளவு உச்சம் பெறும் என்பது இன்று தெரிய வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேநேரம் மேலும் வேறு மூத்த அதிகாரிகள் இருவர் குறித்த விடயத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவின் நேரடிக் கவனத்துக்குக் கொண்டு சென்று ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் உத்தரவை இரத்து செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

## விமானப் படைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வந்துள்ளது.

நேற்று வியாழக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனா.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:–

ரிதிதென்னைப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலையில் வீதிச் சோதனையில் ஈடுபட்ட பொலிஸார் ரிதிதென்னை பொலிஸ் சோதனைச் சாவடியில் இருந்து சுமார் 500 மீற்றர் பிரதான வீதியிலுள்ள செங்கல்வாடி ஒன்றுக்கு அருகில், உள் ஆடையுடன் ஆண் ஒருவர் மரத்தில் கட்டப்பட்ட நிலையில் இருப்ப தைக் கண்டு அங்கு சென்ற போது அவர் விமானப் படை வீரர் என தெரியவந்துள்ளது.

மரத்தில் 'முரட்டு அரசியலுக்காக உதவும் கைக்கூலிகள் இப்படித்தான் கொல்லப்படுகின்றார்கள்' என வாசகம் எழுதப்பட்டு தொங்கவிடப்பட்டுள்ளதைக் கண்டு அவரை உடனடியாக மீட்டு வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

இதனைத் தொடர்ந்து அந்த விமானப் படை வீரரிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் மட்டக்களப்பு விமானப் படை முகாமில் கடமையாற்றும் வலப்பனை பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய ரத்தினசூரிய முதியன்சலாகே என்ற விமானப்படை வீரர் அவர் எனவும், அவர் படை முகாமில் இருந்து விடுமுறைக்காக வீடுசென்றவர் என்றும், சம்பவதினமான நேற்று முன்தினம் புதன்கிழமை காலை ஹட்டன் பஸ்நிலையத்தில் இருந்து மகியங்கனைக்கு செல்லும் பஸ்ஸில் பயணித்து மாலை 3.15 மகியங்கனைக்கு சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் அங்கிருந்து பொலன்னறுவை பஸ்ஸில் பயணித்து மாலை 6.30 மணிக்கு செவினப்பிட்டி மட்டக்களப்பு சந்தியை சென்றடைந்துள்ள நிலையில், மட்டக்களப்பு செல்வதற்காக செவினப்பிட்டி சந்தியில் காத்திருந்தபோது மனைவியுடன் கையடக்க தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்தபோது பின்னால் தனியார் வாகனம் ஒன்றில் வந்த இனந்தெரியாதோரால் தனது தலையில் தாக்கப்பட்டுத் தனது முகத்தை மூடினர் எனவும், பின்னர் தன்னை அந்த வாகனத்தில் ஏற்றிகொண்டு சுமார் 2 மணித்தியால பயணத்தின் பின்னர் ரிதிதென்னை பொலிஸ் சோதனைச் சாவடியில் இருந்து சுமார் 500 மீற்றர் பிரதான வீதியிலுள்ள செங்கல் வாடி ஒன்றுக்கு அருகில் தனது ஆடைகளைக் களைந்து உள் ஆடையுடன் கால்களையும், கைகளையும் கயிற்றால் கட்டி மரத்துடன் கட்டப்பட்டமையுடன் அந்த மரத்தில் 'முரட்டு அரசியலுக்காக உதவும் கைக்கூலிகள் இப்படித்தான் கொல்லப்படுகின்றார்கள்' என வாசம் எழுதப்பட்ட அட்டையைத் தொங்கவிட்டு விட்டு அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

இச் சம்பவத்தையடுத்து சம்பவ இடத்திற்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் குமாரசிறி சென்று சம்பவம் தொடர்பான விசாரணையை மேற்கொண்டார்.

இவ்விடயத்தில் படைவீரருக்கு எதுவிதமான அடிகாயங்கள் இல்லாதமையால் அவர் மேல் ஏற்பட்ட சந்தேகத்தை அடுத்து பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டனர். விமானப்படை வீரரிடம் துருவி மேற்கொண்ட விசாரணையில் அவர் கையடக்கத் தொலைபேசியில் விளையாட்டு ஒன்றில் அதிகபணத்தை இழந்துள்ளார் எனவும், முகாமில் சக படைவீரர்களிடம் கடனாக பணம்வாங்கி அந்த விளையாட்டில் இழந்ததையடுத்து கடனாளியாகியுள்ளார் எனவும் தெரிய வந்தது.

எனவே இதற்கு தீர்வு காண்பதற்காக தான் செவினப்பிட்டி கடை ஒன்றில் பிரிஸ்டல் போட் அட்டை மற்றும் மாக்கர் வாங்கியமையுடன், வேறு ஒரு கடையில் கயிறு ஒன்றையும் வாங்கி கொண்டு ரிதிதென்னை பொலிஸ் சோதனைச் சாவடியை தாண்டி மட்டக்களப்பு பிரதான வீதியில் இறங்கி வீதியில் சனநடமாட்டம் அற்ற குறித்த பகுதிக்கு சென்று பிரிஸ்டல் போட்டில் குறித்த வாசகத்தை எழுதி தொங்கவிட்டுவிட்டு பின்னர் உடைகளை கழற்றிவிட்டு உள் ஆடையுடன் தன்னை தானே கயிற்றால் கட்டி கொண்டு இந்த நாடகமாடியுள்ளார் என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இதனை அடுத்து அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கையைத் தாங்கள் மேற்கொண்டுவருகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

## போராடிய ஆர்ப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடக்குமுறைகள் அதிகரித்து செல்கிறது. அமைதியாக இடம்பெற்ற மக்கள் போராட்டத்தால் நாட்டில் ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது. நாட்டை சூறையாடிய ராஜபக்ஷக்களை விரட்டி அடிப்பதற்கான மக்கள் போராட்டத்தில் வெற்றி கண்டுள்ளனர். போராட்டத்துக்கு மக்கள் ஆதரவும் கிடைத்தது.

ஆனால் இன்று அதே ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்படுகின்றனர். அவர்களைக் காப்பாற்ற வருவதற்கு பலர் பயப்பிடுகின்றனர். நாடாளுமன்றில் நேற்றும் கூட (புதனன்றும் கூட) இது பற்றி பலர் கதைத்துள்ளனர்.

முதல் அங்கே நடைபெற்றது மக்கள் போராட்டம், பின்னர் அது வேறு நபர்களால் கைப்பற்றப்பட்டது என்றவாறான கருத்துக்களைக் கூறியுள்ளனர்.

போராட்டத்துக்கு தலைமைத்துவம் வழங்கியவர்கள் இன்று தேடித் தேடி கைது செய்யப்படுகின்றனர். ஆனால் நாட்டை நாசமாக்குபவர்கள் இன்றும் சுற்றித் திரிகின்றனர். அவர்களை கைது செய்வதற்கு பாதுகாப்பு தரப்பினர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இன்று ஆட்சியில் உள்ள ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்டவர்கள் ஒன்றை மட்டும் மறக்கக் கூடாது. ஆர்ப்பாட்டத்தால் தான் அவர்கள் ஆட்சிக்கு வந்தவர்கள். யார் யார் முதுகில் ஏறி பதவிக்கு வந்தார்களோ அவர்களே இன்று வேட்டையாடப் படுகின்றனர்.

இந்தக்கைதுகள் கண்டிக்கப்படவேண்டியவை. ஆகவே மக்களிடம் நான் ஒன்றைக் கேட்டுக்கொள்கின்றேன். நாட்டை கொள்ளையடித்தவர்களை விரட்டி அடித்த, இந்த ஆர்ப்பாட்டக்காரர்களை காப்பாற்ற மக்கள் முன்வர வேண்டும். – என்றார்.

## நாடாளுமன்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

10.30 மணிக்கு புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உரையுடன் தொடங்கும் என்று கூறப்படுகின்றது.

## போராட்டம் நடத்திய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்த மாளிகையில் பணியாளர்கள் மத்தியில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக்க மற்றும் கட்சியின் பிரதம நிறைவேற்று அதிகாரி மல் செனரத் ஆகியோர் கட்சி தலைமையகத்திற்கு வருகை தந்த ஜனாதிபதியை வரவேற்றனர்.

நாட்டின் சட்டத்திற்கு அமைவாக அமைதியான முறையில் போராட் டங்களில் ஈடுபடுவதற்கு அனைவருக்கும் அனுமதியுள்ளது என்றும், போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் அதே உரிமை உண்டு என்றும், பல்வேறு திறமைகளைக் கொண்ட இளைஞர்களும் அதில் பங்கேற்றிருந்தமையைத் தாம் கண்டார் எனவும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

நாடு மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் இருந்த வேளையில் தான் ஜனாதிபதியாக பதவியேற்றார் எனத் தெரிவித்த ஜனாதிபதி, பொருளாதார சவாலை முறியடித்து நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு பல நடவடிக்கைகளை தற்போது எடுத்துள்ளார் எனவும் தெரிவித்தார்.

## கடன் மறுசீரமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விக்கிரமசிங்க, பல மாதங்களாக எரிபொருள், உணவு மற்றும் மருந்துகளுக்கு கடும்தட்டுப்பாடு நிலவியதைத் தொடர்ந்து ஏற்பட்ட மக்கள் எழுச்சியால் சமீபத்தில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார்.

எரிபொருள் இறக்குமதியை 12 மாதங்களுக்கு கட்டுப்படுத்த இலங்கை அரசாங்கம் அண்மையில் தீர்மானித்துள்ளது. சர்வதேச நிதி நிர்வாக நிறுவகத்தின் தரவுகளின்படி பீஜிங்கிடம் இலங்கை 6.5 பில்லியன் டொலர் கடன்பட்டுள்ளது.

எனவே, கடனை நிலை நிறுத்துவதை உறுதிப்படுத்த மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவேண்டும்.

இலங்கை அதிகாரிகளுடன் சர்வதேச நாணய நிதியம் தொழில்நுட்ப ரீதியான பேச்சுவார்த்தைளில் ஈடுபட்டு வருகிறது என்று அவர் தெரிவித்துள்ளார்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்க விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஒப்பந்தத்துக்கு 35 வயது

**இலங்கை – இந்திய ஒப்பந்தத்துக்கு இன்று 35ஆண்டுகளாகின்றது.**

**சரியாக 35 வருடங்களுக்கு முன்னர்தான் இந்தியப் பிரதர் ராஜீவ் காந்தியும், இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும் இந்த ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டனர்.**

**இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட சிங்கள – தமிழ்ப் பேசும் தரப்புகளிடையே ஓர் இணக்கத்தை ஏற்படுத்தும் சமரச நடவடிக்கையாக இந்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்டது.**

**பிரச்சினையில் நேரடியாக சம்பந்தப்பட்ட தரப்புகள் சிங்களவர்களும் தமிழர்களும். ஆனால் அப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கு என்ற பெயரில் முன்னெடுக்கப்பட்ட ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டவர்கள் சிங்களத் தரப்பின் பிரதிநிதியாக ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும், மறுபக்கத்தில் இந்தியப் பிரதம ராஜீவ் காந்தியும்.**

**அதாவது ஒரு வகையில் பார்த்தால் தமிழ்த் தேசியத் தரப்பின் பிரதியாக – தமிழர் தரப்பின் ஆணை பெற்ற பிரதிநிதியாக – இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார்.**

**அது உண்மைதான். ஏதோ ஒரு வகையில் அத்தகைய ஆணை தமக்கு இருந்ததாக இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி எண்ணிக் கொண்டார். அது தப்பில்லை.**

**முப்பதியைந்து ஆண்டுகளுக்கு முன்னர் இந்த ஒப்பந்த வாசகங்கள் அவசர அவசரமாகத் தயாரான இறுதிக்கட்டத்தில் விரும்பியோ, விரும்பாமலோ, பயத்தினாலோ அல்லது வேறு காரணங்களினாலோ தமிழர் விடுதலைக் கூட்டணியும் மற்றைய தமிழ்ப் போராளிகள் குழுக்களும் அந்த ஒப்பந்தத்துக்கு இந்தியாவுக்குத் தலையசைத்திருந்தன. அதனால் அத்தரப்புகள் மூலம் இந்த உடன்பாட்டில் ஒப்பமிடும் ஆணையைக் கணிசமான தமிழர்களிடம் தாம் பெற்றிருக்கின்றார் என்று ராஜீவ் காந்தி கருதினார்.**

**எனினும் தமிழ் மக்களின் மத்தியில் அதிகம் செல்வாக்குப் பெற்றிருந்த – போராட்ட களத்தில் முன்னிலையில் இயங்கிக் கொண்டிருந்த – விடுதலைப் புலிகளிடம் அவரால் இந்த ஒப்பந்தத்துக்கு இணக்கமோ, சம்மதமோ பெற்றுக் கொள்ள முடியவில்லை.**

**அதனால் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், மதியுரைஞர் அன்டன் பாலசிங்கம், புலிகளின் பிரமுகர்கள் யோகரத்தினம் யோகி போன்றோரை நேரடியாக புதுடில்லிக்கு அழைத்துப் பேசினார் பிரதமர் ராஜீவ் காந்தி.**

**அப்போது இடைக்கால நிர்வாக சபை உட்பட பல முக்கிய அம்சங்கள் அடங்கிய இரகசிய ஒப்பந்தம் ஒன்றுக்கு – இணக்கம் ஒன்றுக்கு – விடுதலைப் புலிகளின் தலைமை யுடன் உடன்பட்டார் பிரதமர் ராஜீவ் காந்தி.**

**அந்த உடன்பாட்டின் மூலம் மேற்படி இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் தமிழர் பிரதிநிதியாக ஒப்பமிடும் ஆணை தமிழ் மக்களாலும் சேர்த்துத் தமக்கு வழங்கப்பட்டிருக்கின்றது என்ற கருத்தில் தான் அந்த இரு நாட்டு உடன்பாட்டில் பிரதமர் ராஜீவ் ஒப்பமிட்டார்.**

**இப்போது இலங்கை – இந்திய ஒப்பந்தம் சரிவர நடைமுறைப்படுத்தப்படாமைக்கு தமிழர் தரப்பு, இந்தியாவுக்கு சரிவர ஒத்துழைக்கவில்லை என்று குறை கூறும் விமர்சகர்கள் யாவரும், பிரபாகரனுடன் தாம் செய்து கொண்ட இணக்கத்தைத் நடைமுறைப்படுத்த ராஜிவ் காந்தி தவறியமைதான் இவ்வளவுக்கும் காரணம் என்ற உண்மையை மறந்து விடுகின்றார்கள்.**

**திரைமறைவில் நடந்த உண்மைகள் மறைக்கப்படுவதால் குற்றம் தமிழர் பக்கம் மீது சுட்டப்படுகின்றது.**

## இளைஞர்கள் போராட்டத்தை அவசரகாலசட்டத்தால் தடுக்க முற்பட்டால் பாரிய அழிவுக்கு நாடு செல்லும்!

### முஜிபுர் எச்சரிக்கை

நாடாளுமன்ற சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தவர்களுக்கு சட்டத்தை நிலைநாட்டாமல் அலரிமாளிகை மற்றும் ஜனாதிபதி மாளிகைக்கு சேதம் ஏற்படுத்தியதாக இளைஞர்களை தேடிப்பிடித்து வழக்கு தொடுப்பதை எவ்வாறு நியாயப்படுத்த முடியும்.

அத்துடன் அவரசகால சட்டத்தை அமுல்படுத்தி இளைஞர்களின் போராட்டத்தைத் தடுக்க முற்பட்டால் அது பாரிய அழிவுக்கே நாட்டை இட்டுச்செல்லும் என எதிர்க்கட்சி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அவசர கால சட்டத்துக்கான நாடாளுமன்றத்தின் அனுமதியை பெற்றுக்கொள்ளும் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

அரச சொத்துக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தியதாகத் தெரிவித்து அரசாங்கம் இளைஞர்களை கைதுசெய்யும் நடவடிக்கையை ஆரம்பித்திருக்கின்றது.

அவர்களுக்கு எதிராக வழக்கு தொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. ஆனால் 2018 இல் 52 நாள் அரசாங்கத்தின்போது இந்த சபையில் அரச சொத்துக்களுக்கு சேதப்படுத்தியவர்களுக்கு எதிராக சட்டத்தை நிலைநாட்டவில்லை.

அதனால் நாடாளுமன்றத்துக்கு வெளியில் நாட்டில் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுமாறு போராடுவதில் என்ன தவறு இருக்கின்றது எனக் கேட்கின்றேன்.

அத்துடன் அன்று நாடாளுமன்றத்தில் சபாநாயகரின் ஆசனத்தில் இருக்கும் அரச இலச்சினை சேதப்படுத்தப்பட்டது. சபாநாயகரின் ஒலிவாங்கியை முறித்துவிட்டார்கள்.

அதிகாரிகளின் ஆசனங்கள் சேதப்படுத்தப்பட்டன. நாடாளுமன்ற சொத்துக்களும் அரச சொத்துக்களாகும். ஆனால் இவர்களுக்கு எதிராக ஏன் வழக்குத் தொடுக்கவில்லை? டீல் அரசியலே இதற்குக் காரணம்.

அன்று ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன இருந்தார் பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ இருந்தார். எதிர்க்கட்சி தலைவராக ரணில் விக்கிரமசிங்க இருந்தார். இவர்களின் டீல் அரசியலே இவர்களுக்கு எதிராக இதுவரை வழக்கு தொடுக்காமல் இருப்பதற்குக் காரணமாகும்.

அத்துடன் ரணில் விக்கிரமசிங்க கடந்த ஏப்ரல் மாதம் இந்த சபையில் உரையாற்றும்போது, மக்களின் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் மக்கள் நாடாளுமன்றத்தை சுற்றிவளைப்பது சாதாரண விடயம். – என்றார்.

அதேபான்று அவர் பிரதமராக நியமிக்கப்பட்டபோது, கோட்டாகமவை பாதுகாப்பதாகவும் அதற்கு தனது கட்சியின் பிரதித்தலைவர் ருவான் விஜேவர்த்தனவை நியமிப்பதாகவும் நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் தெரிவித்து வந்தார். ஆனால் தற்போது ஜனாதிபதியான பின்னர் அவர் வேறு விதமாக செயற்படுகின்றார்

அத்துடன் அவசரகால சட்டத்தை அமுல்படுத்தி இளைஞர்களின் போராட்டத்தை தடுக்க முற்பட்டால் அது பாரிய அழிவுக்கே நாட்டை இட்டுச்செல்லும். கடந்த காலங்களில் நாட்டின் தலைவர்கள் இவ்வாறாக எடுத்த தீர்மானங்களால் அவர்கள் அதல பாதாளத்துக்கு சென்றதை மறந்துவிடக்கூடாது. – என்றார்.

## திரிபோஷா உற்பத்தி மீண்டும் ஆரம்பமாகியது

பல மாதங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த திரிபோஷா உற்பத்தி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திரிபோஷா உற்பத்திக்குத் தேவையான சோளம் உள்ளிட்ட மூலப்பொருள்களுக்கான தட்டுப்பாடு காரணமாக திரிபோஷா உற்பத்தி கடந்த சில மாதங்களாக இடைநிறுத்தப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து நாட்டில் திரிபோஷா உற்பத்தியை மீளவும் ஆரம்பிப்பதற்கான நிதியுதவியை வழங்க உலக உணவுத் திட்டம் அண்மையில் இணக்கம் தெரிவித்திருந்தது. உலக உணவுத் திட்ட அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதிகள் குழுவுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இவ்வாறு இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே தற்போது திரிபோஷா உற்பத்தி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன், திரிபோஷா தயாரிக்கும் நடவடிக்கைகளும் தற்போது மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## சக எம்.பிக்களே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:–

ஆறு, ஏழு கோடி ரூபா பெறுமதியான பணத்தை நான் பெற்றேன் என சமூக வலைத்தளங்கள் ஊடாக தகவல்கள் பரப்படுகின்றன. ஆனால் பணத்துக்கு நானோ எனது குடும்பமோ ஆசைப்பட்டவர்கள் அல்லர். கட்சி எடுத்த முடிவுக்கு மாறாகவும் நான் வாக்களிக்கவில்லை.

தேசிய கல்வியில் கல்லூரியின் காணி தற்போதைய மதிப்பு 60கோடி ரூபா வரை வரும். அதனை நன்கொடையாக வழங்கிய எனக்குப் பணம் பெரிதல்ல. பணத்துக்காகச் செயற்படுவதில் எனக்கோ எனது குடும்பத்துக்கோ உடன்பாடில்லை.

கடந்த காலத்திலும் கூட்டமைப்புத் தலைமைக்கு கோடிக்கணக்கான ரூபா பணம் வழங்கப்பட்டதாகச் செய்திகள் பரப்பப்பட்டன. இவ்வாறான கதைகள் வரக் காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மலினப்படுத்துவதே ஆகும். இதனை சக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களே செய்வதை ஏற்கமுடியாது. எந்தச் சந்தர்ப்பத்திலும் எப்போதும் நான் யாரிடமும் பணம் பெற்றவன் கிடையாது.

இவ்வாறான கதைகளைக் கூறுவதன் மூலம் எங்களை விடக் கூடுதலான விருப்பு வாக்கை பெற்றுக் கொள்ள முடியும் எனக் கருதுவது தவறு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே வாக்குகள் இல்லாது போகும். இன்று மிகப்பலம் பொருந்திய கட்சியாக காணப்படுகின்ற இந்தக் கட்சியை உடைப்பது நிச்சயமாக தமிழ் மக்களுடைய அபிலாசைகள் அனைத்தையும் உடைப்பதாகவே அமையும். இது சிங்கள தேசியத்திற்கும் பேரினவாதிகளுக்கும் உதவி செய்வதாகவே நான் பார்க்கிறேன்.

நிச்சயமாக என்னை பொறுத்தவரை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எப்பொழுதும் எவரிடமோ பணம் பெற்று நான் வேலை செய்தவனல்லன். மாறாக ஒரு நன்மை செய்யப் போகிறேன் என்று பணம் வாங்கியவனுமல்லன். நான் என்னைப் பற்றி சொல்ல வேண்டிய தேவையில்லை. மக்களுக்கு என்னைப் பற்றி நன்றாகத் தெரியும். எங்களுடைய கடந்த காலங்களைப் பார்க்கின்ற பொழுது யாழ்ப்பாணத்தில் அனைவருக்கும் தெரியும் – நாங்கள் எப்படி செயல்பட்டு இருக்கின்றோம் என்று. ஆகவே நான் சொல்லத் தேவையில்லை. ஆனால் இவ்வாறான வதந்திகள் வருகின்ற பொழுது நான் சொல்ல வேண்டிய கடமை இருக்கிறது. – என்றார்.

## வெளிநாடு செல்ல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மற்றும் அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் ஆகியோரின் வெளிநாட்டு பயணங்களைத் தடை செய்து கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப் பித்துள்ளது.

கோட்டை பொலிஸார் நீதிமன்றில் முன்வைத்த கோரிக்கையை பரிசீலித்த கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இவர்கள் விசாரணைகளுக்கு முகம் கொடுக்காமல் வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்ல திட்டமிட்டுள்ளனர் எனத் தமக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளதாக கோட்டை பொலிஸார் நேற்று நீதிமன் றில் அறிவித்திருந்தனர்.

இதன்படி, குறித்த நபர்களின் வெளிநாட்டுப் பயணங்களைத் தடை செய்து உத்தரவு பிறப்பித்த நீதிவான், அந்த உத்தரவை குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

# இலங்கைக்கு விரைந்து உதவ முன்வந்த இந்தியாவைப் பாராட்டுகிறது அமெரிக்கா



வெளிப்படைக்குக் கண்ணைக் கவரும் அல்லது 'சுண்டி இழுக்கும் தலைப்பு கொண்ட' உள்கட்டமைப்புத் திட்டங்களும் –

வெளிப்படைத் தன்மையில்லாக் கடன் திட்டங்களுமே –

இலங்கையில் ஏற்பட்டுள்ள தற்போதைய நெருக்கடியின் பின்னணியில் உள்ள காரணிகளில் முக்கியமானவை என்று சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்காவின் ஏஜென்சியின் (USAID) நிர்வாகி சமந்தா பவர் கடந்த புதன்கிழமை இந்தியாவில் தெரிவித்தார்

ஐஐடி – டெல்லியில் உரை நிகழ்த்திய திருமதி பவர், இலங்கையில் ஏற்பட்ட அவசரநிலைக்குப் பதிலளிப்பதில் இந்தியாவின் விரைவான நடவடிக்கையைப் பாராட்டினார்.

மேலும் குறிப்பாக உணவுப் பாதுகாப்பு அச்சுறுத்தல்களைச் சமாளிக்கும் துறையில் இந்தியாவின் பலம் கடந்த ஏழு தசாப்தங்களாக அமெரிக்காவுடன் கூட்டாண்மையில் வளர்க்கப்பட்டது என்று வாதிட்டார்.

திருமதி பவர் உபநிடதங்களை மேற்கோள் காட்டி, உக்ரைன் நெருக்கடியின் பின்னணியில் தீவிரமடைந்துள்ள பசி மற்றும் வறுமையைச் சமாளிப்பதில் உலகில் இந்தியா அதிகப் பங்கு வகிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். பன்மைத்துவம் மற்றும் சகிப்புத்தன்மைக்கு ஆதரவாக அவர் ஒரு வலுவான சுருதியை உருவாக்கினார், அமெரிக்காவிலும் இந்தியாவிலும் பிளவுகளை விதைக்க முற்படும் சக்திகள் உள்ளன, அவை இனங்கள் மற்றும் மதங்களை ஒருவருக்கொருவர் எதிர்த்து நிற்க முயல்கின்றன என்றார் அவர்.

உண்மையில், கடந்த இரண்டு தசாப்தங்களாக, சீனா இலங்கையின் மிகப்பெரிய கடன் வழங்குநர்களில் ஒருவராக மாறியது, மற்ற கடன் வழங்குபவர்களை விட அதிக வட்டி விகிதத்தில் வெளிப்படைத் தன்மையில்லாக் கடன் ஒப்பந்தங்களை வழங்கியது. மேலும் இலங்கையர்களுக்கு பெரும்பாலும் கேள்விக்குரிய – சர்ச்சைக்கும் சிக்கலுக்குமுரிய – நடைமுறைப் பயன்பாட்டுடன் தலையாய உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதியளித்தது. என்றார் சமந்தா பவர்.

ஆனால், சீனா, இலங்கைக்கு அதிக நிவாரணம் வழங்குவதற்கான அழைப்புகளுக்கு பதிலளிக்கவில்லை என்று அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் பெய்ஜிங் மற்ற இருதரப்பு கடன் வழங்குநர்களைப் போலவே (இலங்கையின்) கடன் கொடுப்பனவுகளை மறுசீரமைக்க இணங்கி ஒத்துழைக்குமா என்பதே அனைவரின் மிகப்பெரிய கேள்வி என்றும் அவர் கூறினார்.

2022 ஆம் ஆண்டில் அமெரிக்கா இலங்கைக்கு 180 மில்லியன் டொலர்களை அவசரகால நிதியுதவியாக வழங்கியது என்றும், கொழும்பிற்கு அவசர உதவி



அளிப்பதற்கு இந்தியா முன்வந்தமைக்குப் பாராட்டு தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.

இந்திய அரசாங்கம் ஏற்கனவே இலங்கைக்கு மனிதாபிமான உதவியாக 16 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது, எதிர்காலத்தில் உணவுப் பற்றாக்குறையைத் தவிர்க்க விவசாயிகளுக்கு உதவுவதற்காக 100,000 தொன் சேதன உரங்களை இலங்கைக்கு ஏற்றுமதி செய்துள்ளது. மேலும் அது இலங்கை அரசாங்கத்திற்கு 3.5 பில்லியன் டொலர் கடன்களை வழங்கியுள்ளது.

இலங்கை அதன் பொருளாதார சரிவிலிருந்து வெளியேறி இயல்புநிலைக்குத் திரும்ப முயற்சிக்கிறது. அதற்கு இந்தியா இயன்ற பின்னூட்டல்களை வழங்குகிறது.

பனிப்போர் கால நிகழ்வுகளின் அடிப்படையில் இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான சாத்தியமான கூட்டாண்மையில் பசுமைப் புரட்சியின் தொடக்கத்திற்கு வழிவகுத்த டெல்லிக்கான அமெரிக்க ஆதரவை திருமதி பவர் பரந்த அளவில் வரவேற்றார்.

சுதந்திரம் அடைந்த உடனேயே உலகளாவிய தெற்கு பகுதிக்கு உதவும் திறனை இந்தியா நிரூபித்துள்ளதாக திருமதி பவர் கூறினார்.

அமெரிக்க அதிகாரி சமந்தா பவர் செவ்வாயன்று வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் மற்றும் வெளியுறவு செயலாளர் வினய் மோகன் குவாத்ராவை சந்தித்தார்.

வேளாண் காடுகளை மேம்படுத்துவதற்காக இந்தியாவுடன் ஒரு புதிய கூட்டாண்மையில் அமெரிக்கா 25 மில்லியன் டொலர் முதலீடு செய்யும் என்று அவர் அறிவித்தார்.

கடந்த 75 ஆண்டுகளில், இந்தியா தன்னை எப்போதும் உலகின் ஏழைகளுக்கு நண்பனாகக் காட்டி வருகிறது. இப்போது, பங்குகள் அரிதாகவே அதிகமாக இருக்கும் போது, இந்தியா நம்பமுடியாத அளவிற்கு தாக்கத்தை ஏற்படுத்தும் வளர்ச்சித் தலைவராக நிமிர்ந்து நிற்கிறது." – என்று திருமதி பவர் புகழாரம் சூட்டினார்.

வரவிருக்கும் மாதங்களில் உலகளாவிய உணவுப் பாதுகாப்பின்மையால் ஏற்படக்கூடிய அரசியல் விளைவுகளைப் பற்றிக் குறிப்பிடுகையில் இலங்கையின் அரசாங்கம் முதலில் வீழ்ந்தது. 17 நாடுகள் (இதே போன்ற) நெருக்கடிகளை எதிர்கொள்கின்றன என்று திருமதி பவர் கூறினார்.

உரையைத் தொடர்ந்து ஒரு சுருக்கமான செய்தியாளர் சந்திப்பின் போது, திருமதி. பவர், மற்ற இடங்களில் உணவுப் பாதுகாப்பின்மையைக் குறைக்க உதவும் உலகளாவிய எதிர்பார்ப்புகள் இந்தியாவுக்கு இருக்கும் போதிலும், புதுடில்லி தனது இறையாண்மைப் பொறுப்பை முதலில் வீட்டில் உணவுப் பாதுகாப்பைக் கவனிக்க வேண்டும் என்பதை உணர்ந்துள்ளதாகக் கூறினார். எவ்வாறாயினும், ஏற்றுமதி கட்டுப்பாடுகள் வீட்டிலேயே உணவு பாதுகாப்பு பிரச்சினைகளை தீர்க்க சிறந்த வழி அல்ல என்றும் –

மேலும் விவசாய உபரி நாடுகள் உலகின் பல்வேறு பகுதிகளில் கடுமையான மனிதாபிமான அவசர நிலைகளைநிவர்த்திசெய்வதற்கான இறக்குமதிகட்டுப்பாடுகள் இருந்தபோதிலும் உணவு விநியோகத்தை தொடரலாம் என்றும் – அவர் வாதிட்டார்.

திருமதிபவர்தனதுஉரையில்,உணவுப்பாதுகாப்பை உறுதி செய்வதில் தனியார் மூலதனம் ஆற்றக்கூடிய பங்கைக் குறிப்பிட்டார்.

விவசாயத்தில் தனியார் முதலீட்டுக்கு எதிரான விவசாயிகள் போராட்டம் பற்றி கேட்டபோது, காலநிலை மாற்றம் (மற்றும் உணவுப் பாதுகாப்பின்மை போன்ற அதன் வீழ்ச்சி) போன்ற முக்கியமான கூட்டு சவால்களை எதிர்கொள்வதில் பொதுத்துறை நிதியுதவி போதுமானதாக இல்லை என்று அவர் வாதிட்டார். எனவே தனியார் துறை தவிர்க்க முடியாத ஒன்றாக முற்றிலும் மாறிவிட்டது'' என்பதை ஏற்க வேண்டும் என்றார் அவர்.

பொது – தனியார் கூட்டாண்மை மிகவும் ஊக்கமளிக்கிறது. உணவுப் பாதுகாப்புப் பின்னடைவு என்பது பெரிய நிதியளிப்பில் இருந்து வேறுபட்ட முதலீட்டில் இருந்து வரும் என்றும் திருமதி பவர் கூறினார்.

**(மூலம்: 'த ஹிண்டு')**



# பொது மக்களை அடக்குவதைவிடுத்து அவர்களின் பிரச்சினைகளை தீர்க்குக!

## சர்வதேச நாடுகளின் 158 புத்திஜீவிகள் கூட்டாக வலியுறுத்தல்

கொழும்பில்அமைதியானமுறையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின்மீது கடந்த 22 ஆம் திகதி படையினரால் நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான வன்முறைத்தாக்குதல்களை வன்மையாகக் கண்டிப்பதாக சர்வதேச நாடுகள் பலவற்றிலும் இயங்கிவரும் முன்னணி பல்கலைக்கழகங்களில் பணியாற்றிவரும் புத்திஜீவிகள் 158 பேர் இணைந்து கூட்டறிக்கையொன்றின் மூலம் தெரிவித்துள்ளனர். அதுமாத்திரமன்றி முன்னைய முறையற்ற ஆட்சியாளருக்கு எதிராக பரந்தளவில் மேற்கொள்ளப்பட்ட அமைதி வழிப்போராட்டங்களின் விளைவாக வெற்றிடமான ஜனாதிபதிப்பதவிக்காகவே ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தால் தெரிவுசெய்யப்பட்டார் எனக் குறிப்பிட்டுள்ள அவர்கள், அவ்வாறிருக்கையில் முன்னைய ஆட்சியாளர்களின் அதே முறையைப் பின்பற்றுவது நாட்டை முன்னோக்கி நகர்த்திச்செல்வதற்கு ஒருபோதும் உதவப்போவதில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கொழும்பு, காலிமுகத்திடல் 'கோட்டா கோ கம' மீதும், அமைதிப்போராட்டக்காரர்கள் மீதும் கடந்த 22 ஆம் திகதி நடத்தப்பட்ட வன்முறைத்தாக்குதல்களைக் கண்டித்து பிரிட்டன், அமெரிக்கா, கனடா, நெதர்லாந்து, சுவீடன், ஆஸ்திரேலியா, சுவிற்ஸஸர்லாந்து, ஜேர்மனி, இந்தியா, பிரான்ஸ், நோர்வே, சிங்கப்பூர், பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இயங்கிவரும் முன்னணி பல்கலைக்கழகங்களில் பேராசிரியர்களாகவும் விரிவுரையாளர்களாகவும் கடமையாற்றும் புத்திஜீவிகள்158பேரின்கையெழுத்துடன் வெளியிடப்பட்டிருக்கும் கூட்டறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு –

இலங்கை மற்றும் தெற்காசிய நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி மிகப்பரந்தளவில் பணியாற்றிவரும் புத்திஜீவிகளான நாம் கடந்த 22 ஆம் திகதிகொழும்பில்அமைதியானமுறையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின்மீது படையினரால் நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான வன்முறைத்தாக்குதல்களை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அமைதிவழிப்போராட்டக்காரர்கள் அறுவர் கடத்தப்பட்டு, தாக்கப்பட்டு, முழங்கால்களால் ரயில்பாதையில் நடக்கவிடப்பட்டு, அவர்கள் மயங்கிவிழும் வரையில் படையினரால் தாக்கப்பட்டுத் துன்புறுத்தப்பட்டனர் எனக் கிடைத்திருக்கும் தகவல் எம்மை பேரதிர்ச்சியடையச் செய்துள்ளது.

அமைதிவழிப்போராட்டத்தை முன்னின்று வழிநடத்திய 9 முன்னணி செயற்பாட்டாளர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுத்தடுத்துவைக்கப்பட்டமையை (பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்) நாம்கடுமையாகக்கண்டனம் செய்கின்றோம்.

வன்முறைகளற்ற முறையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட போராட்டக்காரர்கள்மீது புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்று 24 மணிநேரத்திற்குள்ளாகவே காட்டுமிராண்டித்தனமான தாக்குதலுக்கு உத்தரவிட்ட ரணில் விக்ரமசிங்கவின் செயற்பாடு, அவரது ஆட்சிமுறை தொடர்பில் கவலைக்குரிய சமிக்ஞையைக் காண்பித்திருப்பதுடன் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியிருக்கின்றது. அமைதி வழியிலான செயற்பாட்டா ளர்கள் கடந்த பல மாதங்களாக நாட்டின் நெருக்கடி நிலைக்குக் காரணமானவர் களுக்கு எதிராக ஜனநாயக முறையில் போராட்டங்களை முன்னெடுத்து அனை வரது கவனத் தையும் ஈர்த்திருந்தனர். அதுமாத்திரமன்றி நாட்டுமக்களின் அறிவை மேம்படுத்தும் நோக்கிலான செயற்பாடுகளை பல்கலைக்கழகம், நூலகம் போன்ற பல்வேறுபட்ட வழிகளில் முன்னெடுத்திருந்தனர்.

அமைதிவழிப்போராட்டக்காரர்களை 'பாசிஸவாதிகள்' என சித்திரிப்பது முற்றிலும் தவறானதும், கண்டிக்கத்தக்கதுமான செயற்பாடு என்பதுடன், அவர்கள்மீது அரச படைப்பலத்துடன் கூடிய வன்முறை பிரயோகிக்கப்பட்டமையை நியாயப்படுத்துவதற்கான முயற்சியாகவே அதனை நோக்கவேண்டியிருக்கின்றது.

முன்னைய முறையற்ற ஆட்சியாளருக்கு எதிராக பரந்தளவில் மேற்கொள்ளப்பட்ட அமைதிவழிப்போராட்டங்களின் விளைவாக வெற்றிடமான ஜனாதிபதிப்பதவிக்காகவே ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தால் தெரிவுசெய்யப்பட்டார். அவ்வாறிருக்கையில் முன்னைய ஆட்சியாளர்களின் அதே முறையைப் பின்பற்றுவது நாட்டை முன்னோக்கி நகர்த்திச்செல்வதற்கு ஒருபோதும் உதவப்போவதில்லை என்பதுடன் மக்களைத் தண்டிப்பதை முதலாவது கடமையாகக் கருதாமல், அவர்கள் முகங்கொடுத்திருக்கும் பிரச்சினைகளுக்கு உரியவாறான தீர்வைப் பெற்றுக்கொடுப்பதையே முன்னிலைப்படுத்தவேண்டும்.

இவ்வாறானதொரு பின்னணியில் அரசமைப்பு மற்றும் சர்வதேச சாசனங்களுக்கு அமைவாக நாட்டுமக்களின் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் அதேவேளை, கருத்துவெளிப்பாட்டுச் சுதந்திரம், அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் ஆகிய–வற்றை உறுதிப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கின்றோம். அதுமாத்திரமன்றி கொழும்பு, காலி முகத்திடல் மற்றும் வடக்கு, கிழக்கு மாகா ணங்கள் உள்ளடங்கலாக நாட்டின் சகல பாகங்களிலும் உள்ள அதிகரித்த இரா ணுவப்பிரசன்னத்தை உடனடியாக நீக்கு மாறும் போராட்டக்காரர்களுக்கு எதிராக வன்முறையைப் பிரயோகித்தவர்களைப் பொறுப்புக்கூறச்செய்யுமாறும் வலி யுறுத்துகின்றோம் என்று அந்தக் கூட்ட றிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெளியுறவுத்துறை அமைச்சர் அலிசப்ரியை சந்தித்த சீனத்தூதுவர் குய் சென்ஹோங்



இலங்கைக்கான சீனத் தூதுவர் குய் சென்ஹோங் இலங்கையின் வெளியுறவு அமைச்சர் அலி சப்ரியை நேற்று (புதன்கிழமை) சந்தித்துள்ளார். வெளியுறவு அமைச்சகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இலங்கையின் தற்போதைய நிலைமை மற்றும் இலங்கை சீன நட்புறவு மற்றும் பரஸ்பர முக்கிய விடயங்கள் தொடர்பாக இரு தரப்பினரும் கருத்துகளை பரிமாறிக் கொண்டனர்.

இதேவேளை செவ்வாய்க்கிழமை இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, இலங்கையின் பிரதமர் தினேஷ் குண வர்தன மற்றும் ஜே.வி.பி யின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க ஆகியோரை சந்தித்தார்.

## காலி முகத்திடல் போராட்டத் தளத்தை வேறு இடத்துக்கு மாற்றுவதற்கு முயற்சி!

### நாடாளுமன்றில் முன்மொழிந்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க



கொழும்பு காலி முகத்திடலில் உள்ள போராட்டத் தளத்தை வேறு இடத்துக்கு மாற்றுவதற்கு நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க முன்மொழிந்துள்ளார்.

நேற்று (புதன்கிழமை) நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர், எதிர்ப்புத் தளத்தை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்துக்கு அருகில் உள்ள விகார மஹாதேவி பூங்காவிற்கு மாற்ற முடியும் என்றார்.

நகர அபிவிருத்தி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி செயலகத்துக்கு எதிரே உள்ள போராட்டம் பொருத்தமான இடம் அல்ல என தான் நம்புவதாக பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

காலி முகத்திடல் பசுமையானது வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளையும் உள்ளூர் மக்களையும் கவரும் ஒரு சுற்றுலாத் தளமாகும், எனவே காலி முகத்திடலில் உள்ள போராட்டத் தளத்தை உடனடியாக அகற்ற வேண்டியது அவசியமானது என அவர் மேலும் தெரிவித்தார்.

## உலர் உணவுப் பொதிகள் தம்பலகாமத்தில் வழங்கல்







(ஹஸ்பர்)

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட - தெரிவு செய்யப்பட்ட - பயனாளிகளுக்கான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பயனாளி களுக்கு இந்த உலர் உணவுப் பொதிகள் நேற்று மாலை பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன. ஸிநுஸிஸீயின் மூலமாக 300 குடும்பங்களுக்கு இந்த உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. இதில் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ. முஜீப் மற்றும் LOLC முகாமையாளர்கள், ஊழியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# தொடக்கமில்லாத முடிவு



என்.சத்தியமூர்த்தி



## அக்கரை அக்கறை அலசல்

இன்று, 29 ஜுலை. கடந்த 1987 ஆம் ஆண்டு கைசாத்திடப்பட்ட இந்தியா –இலங்கை ஒப்பந்தத்தின் 35 ஆவது ஆண்டு நேற்றோடு முடிந்து, அடுத்த ஆண்டு கணக்கு இன்று முதல் துவங்குகிறது. இன்னும் 365 நாள்கள் சென்றால், இதுவே 36ஆவது ஆண்டு நிறைவு ஆகும். இது தவிர்த்து, இந்த ஒப்பந்தத்தால், தமிழர் தரப்பு எந்தப் பயனையும் அடையவில்லை. அதன் பயன்களை பெற்றுக்கொள்ள தமிழர் தரப்பும் தயாராயில்லை.

தமிழர்தரப்பைப்பொறுத்தவரையில், இந்த ஒப்பந்தம் இரு நாடுகளுக்கிடையேயான வெறும் ஒப்பந்தம் மட்டும்தான். அதிலிருந்து பிறந்த 13ஆவது அரசமைப்புச்சட்டதிருத்தம்மட்டுமே அவர்கள் சார்ந்தது எனலாம். அதன் காரணமாகவே, விடுதலை புலிகள் இயக்கத் தலைமை அதனை இலங்கையில் திரும்பிய போது எதிர்த்த காலகட்டத்தில், அது கொழும்பு, சிங்கள அரசு மற்றும் அரசியல் தலைமைகளுக்கு மிக வசதியாகப் போயிற்று.

அடுத்தடுத்து அரசேறிய சிங்கள தலைமைகளும் தங்கள் பாட்டிற்கு, 13 ஆவது திருத்தத்தை, அரசியல் யாப்பு மாற்றங்களை செய்யாமலே, உருத் தெரியாத அளவிற்கு மாற்றிவிட்டனர். தேசிய பாடசாலைகள், தேசிய வைத்தியசாலைகள், தேசிய நெடுஞ்சாலைகள் என்றெல்லாம் உருவாக்கப்பட்டமை, இதன் காரணமாகத்தான். அவ்வாறு செய்யாத துறைகளில், 13இன் கீழ் மாகாணங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய பொலிஸ்மற்றும்காணிஅதிகாரங்களை வழங்காமலே இழுத்தடித்து வந்துள்ளனர்.

இதில், சிங்கள அரசின் நிறம், குணம் மாறவில்லை என்பதே உண்மை. ரணில் போன்றோர் வார்த்தையாடல் செய்தார்கள். ராஜபக்ஷக்கள் தங்களது தென்னிலங்கை வாக்குவங்கியைத் தக்க வைத்துக்கொள்ள முகத்தில் அடித்தால் போல், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை தவிர்த்தார்கள். அல்லது, தமிழ் சமூகம் இன்னமும் நம்பி வருகிறது. இதில், கோட்டாபயவோ, தமிழர் வாக்குகள் இல்லாமலே ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்று காட்டுகிறேன் என்று, வடக்கு மாகாணத்தில் பிரசாரமே செய்யாமல், தான் நினைத்த காரியத்தைச் சாதித்துக் காட்டினார்.

### கொடுத்தார், கெடுத்தார்

தமிழர் வாக்குகளையும் பெருவாரியாகப் பெற்ற சந்திரிகா அம்மையாரோ, அவர்களுக்கான தீர்வு திட்டத்தை கொடுப்பதாகக் கூறிக் கொண்டே அதனை கெடுத்தார் என்பதே உண்மை. உண்மையிலேயே, தமிழருக்கு தீர்வு திட்டம் வழங்க வேண்டும் என்பது அவரது குறிகோளாக இருந்திருந்தால், தனது பதவியை நீடித்துக் கொள்வதற்கான சர்ச்சைக்குரிய பகுதிகளையும் ஒரே அரசியல் சட்ட திருத்த நகல் மூலம் முன் எடுத்திருக்கமாட்டார். ‘வைத்தால் குடுமி, சிரைத்தால் மொட்டை’ என்ற அளவிலேயே அவருடைய முன்னெடுப்புகள் இருந்தன.

சந்திரிகா அம்மையாரின் தில்லாலங்கடி வேலை காரணமாக, அவரை முன்னிறுத்தி, தமிழ் சமூகத்தையும், சர்வதேசத்தையும் ஏமாற்றுவதில் அன்று எதிர்க்கட்சி தலைவராக இருந்து, இன்று ஜனாதிபதியாகி உள்ள ரணிலும் வெற்றி பெற்றார். அதாவது, தங்களது அரசியல் சண்டையை முன்னிறுத்தி, சந்திரிகா – ரணில் ஆகிய இருவர் சார்ந்த சிங்கள தரப்புகளும், தமிழருக்கும் சர்வதேசத்திற்கும் அல்வா கொடுத்தன.

இதன் ஒரு பகுதியாகவே, தமிழருக்கான தீர்வு திட்டத்தை எதிர்க்காமலே, சந்திரிகா அம்மையாரின் பதவிக்காலம் நீடிப்பு குறித்த ரத்துக்களை காரணம் காட்டி, ரணில், அந்த அரசமைப்பு நகலை நாடாளுமன்றத்தின் உள்ளேயே தீ வைத்துக் கொளுத்தினார். அந்த அளவிற்கு, இன்று வரை, நாடாளுமன்றத்தையும், அந்த நாடாளுமன்றத்தின் உள்ளேயே, நாட்டின் அரசியல் யாப்பை வேறு யாரும் அவமதித்தமை இல்லை.

### யானை தன் தலையில்...

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒப்பந்தம் இலங்கை அரசிற்கும் தமிழர் தரப்பிற்கும் இடையேயே இடம் பெற்றிருக்க வேண்டும், அதில் தமிழர் தரப்பிற்காக இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி ஒப்பமிட வேண்டிய அவசியம் இல்லை, என்று கூறுவோர் இன்றளவும் உள்ளனர். ஆனால், இலங்கை அதிபர் ஜெயவர்தனவுடன் விடுதலை புலிகள் இயக்கம் எந்தவொரு தீர்வு திட்டத்திலும் ஒப்பமிட்டு விடக்கூடாது என்பதில் பிற தமிழ் தரப்புகள் கரிசனமாக இருந்தன என்று கூறுவோரும் உள்ளனர். அதனால் தான், அந்த திட்டம் பாழாகி விடகூடாது என்று இந்தியாவே அதனைத் தனது பணித்திட்டமாக மாற்றிக் கொண்டது என்று தெரியவந்தது.

விடுதலை புலிகள் இயக்கத்தை பொறுத்தவரை, அதன் தலைவர் பிரபாகரனின் பரிபூரண சம்மதம் இல்லாமலே, இந்திய – இலங்கை ஒப்பந்தம் முன்னெடுக்கப்பட்டு, கையெழுத்திடப்பட்டதாக அன்றும் செய்தி பரவியது. இன்றும் அந்த எண்ணம் மாறவில்லை. ஆனால், அதற்காக மட்டுமே, தனது சுயகௌரவத்தை மட்டுமே முன்னிறுத்தி அவர், பிறிதொரு காலத்தில், அந்த ஒப்பந்தத்தையும், அதன் மூலம் பிறந்த 13 ஆவது திருத்தத்தையும் முழுவதுமாக நிராகரித்தமை, யானை தன் தலையிலேயே மண்ணை வாரிப் போட்டுக் கொண்ட முதல் நிகழ்வு.

மாறாக, 13 இல் இருந்ததாக அவர்கள் கருதிய குற்றம் குறைகளுடன் அதனை அமுல்படுத்த விடுதலை புலிகள் இயக்கம் முன் வந்திருந்தால், இன்றும் குவளையைக் கவிழ்த்து காட்டி, ஒன்றுமே கிடைக்கவில்லை என்று சர்வதேசத்திடம் மன்றாடும் நிலைமைக்கு தமிழ் சமூகம் தள்ளப்பட்டிருக்காது. இனப் பிரச்சினை இத்தனை தமிழ் உயிர்களைக் காவு வாங்கி இருக்காது.

### மந்திரத்தில் மாங்காய்

இதன் காரணமாகவே, இரண்டு பிரச்சினைகளையும் முன் வைத்து, தொடர்ந்து உள்வீட்டு மற்றும் உள்நாட்டு அரசியல் செய்ய சில – பல தமிழ் சக்திகள் தொடர்ந்து முயன்று அதில் தொடர்ந்து தோல்வியைச் சந்தித்து வந்திருக்கா. தங்களது தோல்வியையே தமிழர்களின் தோல்வியாக சித்திரித்து, ஓர் இனத்தையே அதனை நம்பவைத்திருக்க முடியாது.

இதற்கு அடுத்த படியாக, சர்வதேசமும், மந்திரத்தில் மாங்காய் வரவழைக்க முடியும் என்று தமிழர் தரப்பை நம்ப வைத்து, அதன் மூலம் நாட்டை வீழ்த்தி விட முயன்றிருக்க முடியாது. அதற்கு தமிழ் மக்களின் அரசியல் தரப்புகளை கொண்டே, தங்களது ‘அஜெண்டாவை’ (நிகழ்ச்சி நிரலை) தமிழர்களது செயல் திட்டமாக மாற்றி இருக்காது.

இல்லை என்றால், இன்று அரசியல் தீர்வு என்று கூறிக் கொண்டே, தமிழர் தரப்பே, போர்க் குற்றங்கள், இடைகால நீதி (Transitional Justice) முதலான மேற்குலகின் கருத்தியலாக்கங்களை தமிழர் மீது திணித்திருக்க முடியாது. அவற்றின் மீது தொடர்ந்து பழி போட்டுக் கொண்டே, இனப்பிரச்சினையின், நீள . அகலங்கள் மாறிவிடாமல் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இனப்போர் முடிந்து பதின்மூன்று ஆண்டுகள் கழிந்த பின்னரும், அரசியல் தீர்வு விடயத்தில், எந்தவித முன்னேற்றமும் இல்லாமல் செய்திருக்க முடியாது.

அந்த விதத்தில், முள்ளிவாய்க்கால் நினைவுகூரல் கூட உண்மையிலேயே தமிழரின் கலாச்சாரத்தில் ஊறிய விடயமா? அதற்காக, இனப்போரில் உயிர் இழந்தவர்களுக்கு தமிழினம் நன்றிக் கடன் செலுத்த கூடாது அல்லது செலுத்த வேண்டாம் என்பதல்ல பொருள்.

மாறாக, மேலை நாடுகளும் அவற்றில் வாழ்ந்து பழக்கப்பட்டு போன புலம் பெயர்ந்தோரின் நிகழ்சி நிரல்களுக்கும் தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ள உள்நாட்டு வாழ் தமிழர்கள் கண்ணாடியில் முகம் நோக்கி தங்களை திருத்திக் கொள்ள வேண்டும். காரணம், இன்று, நினைவேந்தல் தினம், மாவீரர் தினம் என்று வருடாந்தம் அர்ப்பணிப்புடன் செயலாற்றி, இடைப்பட்ட காலத்தில் காணாமலாக்கப்பட்டோரின் பெயராலும் போராட்டம் நடத்துவதை தவிர தமிழ் மக்கள் சாதித்தது தான் என்ன?

### மீண்டும் பதின்மூன்று?

இன்றைய அரசியல் சூழலில், தமிழ் மக்களுக்கு, பதின்மூன்றாம் திருத்தத்தின் அடிப்படையிலான தீர்வு திட்டம் போதுமானது என்று கூறுவது மக்களால் ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு விடயம். உண்மை. ஆனால், அவர்களின் கையில் கடந்த காலங்களில் கிடைத்துவிட்ட ஆட்சி . அதிகாரங்கள்தான், என்ன? பூச்சியம். அவ்வாறென்றால், மீண்டும் அந்த பூச்சியத்தில் இருந்துதானே, மீண்டும் மீண்டும் அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளை துவங்கி வந்துள்ளனர்?

இத்தகைய பின்னணியில், இன்று நாட்டில் நிலவும் அரசியல் சூழலில், தடாலடியாக, பதின்மூன்றை முழுவதுமாக செயல்படுத்தும் கோரிக்கையை தமிழர் தரப்பு ஒன்றாக சேர்ந்து முன் வைக்கலாம். அதன் ஒரு பகுதியாகவே, தொடர்ந்து அரசுடனான பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கலாம். அந்த கட்டத்தில், கூட்டமைப்பு, கஜேந்திர குமார் பொன்னம்பலம் மற்றும் விக்னேஸ்வரன் தரப்புகள் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கருத்துக்கள் உள்வாங்கி கொள்ளலாம். கொள்ளப்பட வேண்டும்.

அவ்வாறில்லாமல், புதிய பேச்சுவார்த்தைகள் மூலமே அரசியல் தீர்வுகள் வேரில் இருந்து விழுதுகள் வரை முன்னெடுக்கப்பட வேண்டும் என்று யாராவது இன்னமும் கருதினால், அவர்கள் மீண்டும் ஒரு முறை தமிழ் மக்களை ஏமாற்றுகிறார்கள் என்றுதான் பொருள். காரணம், தற்போதுள்ள பொருளாதார சூழ்நிலையில், தென்னிலங்கை அரசும் அரசியல் தலைமைகளும் அது சார்ந்த இழுபறிகளில் சிக்கி கொள்ளும்.

### முக்கோண விளையாட்டு

இது போன்ற பொருளாதார பிரச்சினைகள் மற்றும் அரசியல் நெருக்கடிகள் எதுவுமே இல்லாமல், கடந்த மைத்திரி – ரணில் அரசு காலத்தில், அவர்களால், 2015 ஜனாதிபதி தேர்தல் காலத்தில் கூட்டமைப்புக்கு உறுதி அளித்ததற்கு ஏற்ப, அரசியல் தீர்வு எதனையும் நாட்டின் முன் வைக்க முடியவில்லை. அவ்வாறு நடந்திருந்தால் மட்டுமே, தென்னிலங்கை சார்ந்த நாடாளுமன்றத்தின் நிலைப்பாடு என்னவாய் இருந்திருக்கும் என்று தெரிய வந்திருக்கும்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# அவசரகால சட்டத்துக்கு எதிரானவர்கள் தீவிரவாதத்துக்கு துணை செல்பவர்களே!

## அவ்வாறே கருதவேண்டும் என்கிறார் பிரசன்ன ரணதுங்க



ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக ஒதுக்கப்பட்டுள்ளபோராட்டஇடம்முழுமையாகஇல்லாதொழிக்கப்பட வேண்டும். போராட்டக்காரர்களுக்கு விகாரமாஹா தேவி பூங்காவில் இடம் ஒதுக்கி கொடுக்க வேண்டும்.

காலி முகத்திடலில் அமைதி வழிப்போராட்டம் என்ற பெயரில் போதைப்பொருள் பாவனையாளர்களே ஒன்று கூடியுள்ளார்கள்.

போராட்டத்தை கட்டுப்படுத்தாவிடின் எவரும் உயிர் வாழ முடியாது. ஆகவே அவசரகால சட்டத்துக்கு சகலரும் ஆதரவளிக்க வேண்டும். எதிரானவர்கள் தீவிரவாதத்துக்குத் துணை செல்பவர்களாகக் கருதப்படுவர் என ஆளும் தரப்பின் பிரதம கொறடா பிரசன்ன ரணதுங்க சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற அவசரகால சட்டத்தின் மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ஜனாதிபதி செயலகத்தை கைப்பற்றியிருந்த போராட்டக்காரர்களை அங்கிருந்து வெளியேற்ற பாதுகாப்பு தரப்பினர் முன்னெடுத்த நடவடிக்கை தொடர்பில் பல வேறு தரப்பினர் மாறுபட்ட விடயங்களைக் குறிப்பிட்டுக் கொள்கிறார்கள்.

காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் தங்களின் போராட்டகளத்துக்கு 'கோட்டா கோ கம'என பெயரிட்டிருந்தார்கள்.ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவியில் இருந்து வெளியேற்றுவது போராட்டக்காரர்களின் பிரதான நோக்கமாகக் காணப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகும் வரை போராட்டத்தை கைவிடப் போவதில்லை என போராட்டக்காரர்கள் குறிப்பிட்டார்கள்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியதை தொடர்ந்து அரசமைப்பின் பிரகாரம் புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இருப்பினும் காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியதன் பின்னரும், காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபடுவது பொருத்தமற்றது.

அரசாங்கத்தை வீழ்த்தி, அரசியல் சூழ்ச்சி செய்யும் மையமாக காலி முகத்தில் போராட்டக்களத்தை மாற்றியமைக்க முடியாது.

அமைதி வழி போராட்டக்காரர்களை முன்னிலைப்படுத்தி போதைப்பொருள் பாவனையாளர்கள், கொள்ளையர்கள் மற்றும் பாதாள குழுவினர் போராட்டத்தை வழிநடத்தினார்கள். அரசியல் கட்சிகளின் தலைவர்களும் இவர்களுக்கு ஆதரவு வழங்கினார்கள்.

நாட்டை மாற்றியமைப்பதாக குறிப்பிட்டுக்கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் முறையற்ற வகையில் செயற்படுகிறார்கள்.

போராட்டக்களத்தில் கோட்டா கோ கம பெயரை மாற்றி பிறிதொரு பெயரை சூட்டி மீண்டும் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள். ஆகவே தொடர்ந்து இவர்கள் இங்கு போராடுவதற்கு தார்மீக உரிமையில்லை.

காலி முகத்திடல் போராட்டக்களத்தை அண்மித்த பகுதியில் சுற்றுலா ஹோட்டல்கள், துறைமுக நகரம் அமையப்பெற்றுள்ளது.

பாதுகாப்பற்ற போராட்டங்களால் நாட்டின் பொருளாதாரத்துக்கு தொடர்ந்து பாதிப்பு ஏற்படுவதுடன்,காலி முகத்திடல் போராட்டக்காரர்களால் பொது சொத்துக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

சட்டவிரோத கூடாரங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இவர்களின் செயற்பாடு நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்துக்கு முற்றிலும் விரோதமானது. அமைதி வழி போராட்டம் என்ற பெயரில் வன்முறையான போராட்டங்களில் ஈடுபட்டுள்ளார்கள்.

போதைப்பொருள் பாவனையாளர்களின் பாதுகாப்பு இடமாகவும், சட்டவிரோத செயற்பாடுகளுக்கான மையமாகவும் காலி முகத்திடல் போராட்டக்களம் உள்ளது. நாட்டின் பிரதான கேந்திர மையமான காலி முகத்திடலில் இவ்வாறான செயற்பாடுகளுக்கு எவ்வாறு தொடர்ந்து இடமளிக்க முடியும். அரசியல் நோக்கமற்ற வகையில் இந்த விடயத்தை பொறுப்புடன் ஆராய வேண்டும்.

மக்களாணையுடன் ஆட்சியதிகாரத்தை கைப்பற்ற முடியாத அரசியல் தரப்பினர் போராட்டங்கள் ஊடாக ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிக்கிறார்கள். முப்படையினர் ஜனநாயகத்தை பாதுகாத்துள்ளார்கள். இராணுவத்தினராலேயே நாடாளுமன்றம் பாதுகாக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பாதுகாப்பிற்காகவே அவசரகால சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டு மக்கள் போராட்டகாரர்களின் உண்மை நோக்கத்தை விளங்கிக்கொண்டார்கள்.

காலிமுகத்திடலில் போதைப்பொருள் போராட்டக்காரர்கள் தான் தற்போது உள்ளார்கள். போராட்டத்தை கட்டுப்படுத்தாவிடின் எவருக்கும் உயிர்வாழ முடியாத நிலை ஏற்படும்.

காலி முகத்திடலில் ஒதுக்கப்பட்டுள்ள போராட்ட களம் இடத்தை பிறிதொரு இடத்திற்கு மாற்றியமைப்பது அவசியமாகும்.பொருளாதார கேந்திர மையத்திற்கு மத்தியில் போராட்டகளம் காணப்படுவது பொருத்தமற்றது.

முப்படையினரினருக்கு மதிப்பளிக்க வேண்டும். காலி முகத்திடல் போராட்டகாரர்கள் இராணுவத்தினரையும், பொலிஸாரையும் மிக கீழ்த்தரமான முறையில் விமர்சித்தார்கள். அவசரகால சட்டத்திற்கு எதிராக வாக்களிப்பவர்கள் தீவிரவாதத்துக்கு ஆதரவாளர்களாகக் கருதப்படுவார்கள். – என்றார்.

# இலங்கை பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டவேளை இந்தியா உதவியது

## சீனா உதவிக் குரலுக்கு பதிலளிக்கவில்லை என்கிறார் சமந்தா பவர்

இலங்கை பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதற்கு இந்தியா துரிதமாக உதவியது. ஆனால் உதவிக்காக விடுக்கப்பட்ட வேண்டுகோள்களுக்கு சீனா பதிலளிக்கவில்லை என யு.எஸ்.எயிட்டின் தலைமை நிர்வாகி சமந்தா பவர் தெரிவித்துள்ளார்

இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள சமந்தா பவர் அங்கு இதனைத் தெரிவித்துள்ளார்.

புதுடில்லி ஐஐடியில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுபடுவதற்கான உதவும் மிக முக்கியமான நடவடிக்கைகளுடன் இந்தியா துரிதமாகப் பதில் நடவடிக்கையில் ஈடுபட்டது என சமந்தா பவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் சீனா கணிசமான நிவாரணத்தை என்ற வேண்டுகோள்களுக்கு இறுதிவரை பதில் அளிக்கப்படவில்லை எனவும் சமந்தா பவர் தெரிவித்துள்ளார்.

ஏனைய கடன்வழங்குநர்களை விட வெளிப்படைத்தன்மையற்ற கடன்களை உயர் வட்டிக்கு வழங்கியதன் மூலம் சீனா இலங்கைக்கு பெருமளவு கடன்வழங்கிய நாடாக மாறியது என குறிப்பிட்டுள்ள சமந்தா பவர் இலங்கைக்கு உதவுவதற்காக சீனா கடன்மறுசீரமைப்பில் ஈடுபடுமா எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்தியா மிகவேகமாக முற்றிலும் முக்கியமான நடவடிக்கைகளுடன்விரைந்ததுஎனவும்தெரிவித்துள்ள அவர், இலங்கை வங்குரோத்து நிலையையும் மேலும் வீழ்ச்சியையும் தடுப்பதற்கு உதவுவதற்காக இலங்கைக்கு இந்தியா வழங்கிய 300 கோடியே 50 லட்சம் டொலர் கடனுதவி தொடர்பாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் 2000 ஆம் ஆண்டு முதல் அதிகளவில் இலங்கைக்கு விரும்பி கடனுதவி வழங்கிய சீனா, இந்தியாவிற்கு நேர்மாறான விதத்தில்செயற்பட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு தசாப்த காலத்தில் இலங்கைக்கு வெளிப்படைத் தன்மையற்ற அதிக வட்டியுடனான கடன்களை வழங்கியதன் மூலமும், மிகச்சிறிய வருமானத்தைக் கூட பெற்றுத்தராத கப்பல்கள் ஒருபோதும் பயன்படுத்தாத பாரிய துறைமுகம் உட்பட சந்தேகத்திற்குரிய நடைமுறைப்பயன்பாட்டுக்குரிய உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு உதவி வழங்கியதன் மூலமும் சீனா இலங்கைக்கு அதிக கடன் வழங்கிய நாடாக மாறியது எனவும் சமந்தா பவர் தெரிவித்துள்ளார்.



உலக நாடுகள் நெருக்கடியை எதிர்கொள்ளும் தருணங்களில் இந்தியா உதவியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சீனா இலங்கைக்கு கடனுதவி வழங்குவதாக உறுதியளித்தது ஆனால் அவற்றை வழங்கவில்லை எனத் தெரிவித்துள்ள சமந்தா பவர் தனது உரையில் ஜனநாயக கொள்கைகளைக் கடைப்பிடிக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

(விரிவான கட்டுரை 5ஆம் பக்கத்தில்...)

# சலுகைகள் மற்றும் பதவிகளை காட்டி தம்மை கவர முடியாது!

## என்கின்றார் எரான் விக்கிரமரத்ன

அரசாங்கத்தைக்கைப்பற்றதயாராக இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

அதற்கு முதலில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழித்து தேர்தலை நடத்துவதற்கு இணக்கம் காணப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

சில நிபந்தனைகளின் கீழ் ஆட்சியைப் பொறுப்பேற்கத் தயாராக இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமும் தாம் கூறியிருந்தேன் என எரான் விக்கிரமரத்ன சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், மனித உரிமைகளைப் புறக்கணித்தும், ஊடகங்களை நசுக்குவதன் மூலமும் முன்னேறிச் செல்ல முடியாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

21 ஆவது திருத்தத்தை நிறைவேற்றி போராட்டக்காரர்களின் கோரிக்கைக்கு செவிசாய்த்தால் இந்த அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கத் தாம் தயாராக இருக்கிறேன் எனவும் கூறினார்.

அரசாங்கத்தில் இணையுமாறு அழைப்புகள் தொடர்ந்தும் வருகின்றன எனவும் எனினும் சலுகைகள் மற்றும் பதவிகள் மூலம் தம்மைக் கவர முடியாது என்றும் எரான் விக்கிரமரத்ன குறிப்பிட்டார்.

# சீனாவின் விஞ்ஞான ஆய்வுக் கப்பல் இலங்கை வருகிறது

சீனாவின் விஞ்ஞான ஆய்வுக் கப்பல் ஒன்று இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வருகை தரவுள்ளது.

எதிர்வரும் ஒகஸ்ட் 11 ஆம் திகதி அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வரும் சைனாஸ் யுவான்வாங் -5 என்ற இந்த கப்பல் ஒகஸ்ட் 17 ஆம் திகதி வரை துறைமுகத்தில் தரித்து நிற்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சைனாஸ் யுவான்வாங் – 5 விண்வெளி கண்காணிப்பு கப்பல் விண்வெளி தரை தகவல் பரிமாற்றத்தை செயற்படுத்தி வருகின்றது.

அத்துடன், செயற்கைக் கோள்களின் சுற்றுப்பாதை நிர்ணயம் மற்றும் அணுகலுக்கு முக்கியமான தகவல் ஆதரவை வழங்குவதில் நிபுணத்துவம் பெற்றுள்ளது.

கொழும்பில் இருந்து சுமார் 250 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள அம்பாந்தோட்டை துறைமுகம் சீன கடனுதவியில் நிர்மாணிக்கப்பட்டது.

பின்னர் சீனாவிற்கான கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமை காரணமாக 99 வருட குத்தகைக்கு சீனா விடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

## செவ்வழி நயனம்

# ஆனந்தம் அருளும் ஆடிப்பூர நன்னாள்

— தியாக. மயூரகிரிக்குருக்கள் —

அம்பிகை வழிபாட்டுக்கு மிகவும் சிறப்புடைய மாதம் ஆடி மாதம். தக்ஷணாயனத்தின் ஆரம்பமான ஆடி மாதத்தில் அம்பிகை வழிபாடு மிகச்சிறப்பானதாக கருதப்படுகிறது.

அதனால், இந்த மாதத்தில் நம் முன்னோர் லௌகீகமான விழாக்களை குறைத்து வழிபாட்டில் அதிக ஈடுபாடு காட்டினர்.

எமது ஒரு வருடம் தேவர்களுக்கு ஒரு ஆண்டு என்ற வகையில், ஆடி மாதம் அவர்களுக்கு இரவின் ஆரம்பகாலமான வேளையான சாயங்காலம். இக்காலம் இறை வழிபாட்டுக்குரிய சந்திப்பொழுது ஆகும்.

இவ்வகைச் சிறப்பினாலே இம் மாதமே அன்னையை பூசிப்பதற்குரிய மாதமாகிற போதும், அதிலும் மிகச்சிறப்பாக ஆடி மாத பூர நட்சத்திர நாள் குறிப்பிடப்படுகிறது.

அகிலாண்ட நாயகியான அன்னை அவதரித்த நாளாகவும் பூப்பெய்திய நாளாகவும் கருவுற்ற (வளைகாப்பு) நாளாகவும் இந்நாளைக் குறிப்பிடுவோர் உளர்.




என்றும் கன்னியாகவே திகழும் அவள் அகிலாண்ட கோடி ஈன்ற அன்னை எனவே, மேற்சொன்ன மூன்றும் எப்படி நிகழும் என ஐயுறலாம்.

ஆக, அவள் தம் அடியார் மேற்கொண்ட பரிவால் இவ்வாறு மூன்று நிலைகளிலும் காட்சி தந்து கருணை பொழிந்த நாள் என்றே இதனைக் கருதலாம்.

எது எவ்வாறாயினும் இவ்வாறெல்லாம் புராண நூல்களில் பேசப்பட்டதால் மிகவும் புனித நாள் ஆடிப்பூரம் என்பதில் ஐயமில்லை.

ஆகம நூல்களும் இந்நாளில் சிறப்பாக வழிபாடாற்றுமாறு அறிவுறுத்துகின்றன.

இதனாற் போலும் பெரும்பாலான தேவி ஆலயங்களில் ஆடிப்பூரத்தை நிறைவு நாளாக கொண்டு மகோற்சவங்கள் இடம்பெறுவதை அவதானிக்கலாம்.

தனித்து அம்பிகை ஆலயங்களில் மட்டுமன்றி சிவாலயங்களில் வீற்றிருக்கும் அம்பிகைக்கு மகோற்சவங்களை இந்நாளில் நிகழ்த்துவதை அவதானிக்கலாம்.

பூர நட்சத்திரமே அம்பிகைக்கு உரியது. எனவே எல்லா மாத பூர நட்சத்திரங்களுமே தேவி வழிபாட்டுக்கு உகந்த




தாக இருக்க அதிலும் ஐப்பசி பூரம், ஆடிப்பூரமாகியன இன்னும் சிறப்பு பெறுகின்றன. அவற்றினும் ஆடிப்பூரம் முதன்மை பெறுகிறது.

இலங்கை மரபில் இந்நாளில் அம்பிகை பூப்பெய்தியதாக கருதி ருது சோபன வைபவம் செய்யும் வழக்கம் உண்டு. தமிழகத்தில் கருவுற்றதாகப் பாவித்து வளைகாப்புச் செய்யும் வழக்கம் உண்டு.

இவற்றை தத்துவ – வாழ்வியல் அடிப்படைகளில் கண்டு மகிழ வேண்டும்.

இந்த ஆடி மாதம் வயல் விதைப்பு ஆரம்பிக்கும் காலம். ஆக, எம் செல்வமான வயல்களில் நல்ல விளைச்சல் உண்டாகவும் வாழ்வில் சந்ததி வளம் நிறையவும் இந்நாளில் வழிபாடாற்றி வருவது இயல்பானது.

ஆடிப்பூரத்தில் தான் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி ஆண்டாள் அவதரித்தாள். ஆதலால் இந்நாள் திருமகளுக்கும் உகந்தது. செல்வ வளம் சேர்ப்பது.

இந்த ஆண்டு வளர்பிறை சதுர்த்தி விரதமும் அன்றைக்கே சேர்கிறது. அதுநாக சதுர்த்தியாகவும் அமைகிறது.

எனவே, 01.08.2022 திங்கட்கிழமை அமைகிற இந்த அரிய திருநாளில் அம்பிகையை வழிபட்டு வேண்டும் வரம் வேண்டியவாறு பெற்று மகிழ்வோமாக.

# ஒழுக்க விழுமியங்களிலிருந்து விலகுகிறதா இளைய சமுதாயம்...?




**நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்**
**தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும்**

என்பார், பொய்யாமொழிப் புலவர் திருவள்ளுவர். இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டின் அறிவியல் யுகத்தில், கோளமயமாக்கல் நிகழ்ந்துவிட்ட சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் ஒழுக்கத்தைப் பற்றி பேச வேண்டிய தேவையைக் கணம் தோறும் உணர்ந்து கொண்டிருக்கிறோம். ஒழுக்கம் பற்றி நாம் ஏன் பேச வேண்டும்? திருக்குறளின் பதினான்காம் அதிகாரத்தில் ஒழுக்கமுடைமை பற்றிப் பேச வந்த தெய்வப்புலவர், சொன்னதை விடவா நாம் ஒழுக்கம் பற்றி அதிகமாய்ப் பேசி விட முடியும்? இல்லை. என்றாலும், இன்றைய சூழ்நிலையில் எமது எதிர்காலத் தலைமுறையின் வேரை ஆரோக்கியமானதாக நிலைநிறுத்த ஒழுக்கம் பற்றி வலியுறுத்தல் மீள, மீள அவசியமாகிறது.

ஒழுக்கம் என்பது, சொல்கிறபடி நடப்பதுவும், நடக்கிறபடி சொல்வதும் தவிர தனிப்பட்ட குணம் எதுவும் இல்லை என்பார் சீர்திருத்தத் தந்தை ஈ.வே.ரா. பெரியார் அவர்கள். உண்மைதான். இன்று,சொல்லும், செயலும் ஒன்றாயிருப்பவர்களைக் காண்பதென்பது மிகவும் அரிதாகவேயிருக்கிறது. வளர்முக நாடுகளில் மாத்திரமன்றி விருத்தியடைந்த நாடுகளிலும் இளம் தலைமுறையினரால் ஏற்படும் பல்வேறு சமூகப் பிரச்சினைகளின் அடிப்படைக் காரணிகளில் ஒன்றாக ஒழுக்கத்தின்போதாமை இருப்பதை அவதானிக்கலாம். சமூக நேர் வழியிலிருந்து விலகுதல், முரண்படுதல், சமூக நீதியைப் புறக்கணித்தல்,சமூக அச்சுறுத்தல்களை ஏற்படுத்தல், மக்களின் சகிக்கும் எல்லையை மீறுதல் போன்றவற்றின் வேராக இளம்பராயத்துச் சிறுவர்களுக்கு ஒழுக்கத்தின் முக்கியத்துவம் சரியான முறையில் கற்பிக்கப்படாமை காணப்படுவதை வேதனையோடு சுட்டிக் காட்ட முடியும். இளைய சமுதாயம் அறிவியலிலும், தொழில்நுட்பத்திலும் முன்னெப்போதுமில்லாத வகையில் ஆற்றல் கொண்டிருப்பினும், ஒழுக்கத்தின் கூறுகளையும் அச்சமுதாயம் ஏகலைவனைப் போலத் தாமே கற்றுக் கொள்ளும் என நாம் நினைத்தோமாயின் அதைப்போல முட்டாள்தனம் வேறொன்றுமில்லை. கல்விக்கூடங்களும், ஆசிரியர்களும் வெறுமனே அறிவிற்கு மட்டுமன்றி மாணவர்களின் ஒழுக்கம் சார் நடத்தைகளுக்கும் தாமாகவே மனமுவந்து பொறுப்பேற்க வேண்டும்.

உலகம் சுருங்கி ஒரு கிராமமாக மாறியுள்ள நிலையில், மாணவர்கள் தத்தமது கலாசார அடையாளங்களையும், பண்பாட்டுக் கோலங்களையும் தொலைத்து விட்டனர். எதிர்காலத் தொழில் போட்டி நிறைந்துள்ள உலகில் மாணவர்கள் பரீட்சைக்காகத் தயார் செய்யப்படும் நிலையொன்றையே இன்று நாம் கல்விக் கூடங்களில் காண முடிகிறது. இத்தகைய பின்னணியில் இளைய சமுதாயத்தின் ஒழுக்கத்தின் திசை திரும்பலை வழிப்படுத்த வேண்டியது, சமூகப் பொறுப்புள்ள நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

இன்று உலகை ஆட்டிப்படைக்கின்ற போதைப் பொருள்கள் எமது இளைய சமுதாயத்தின் முற்றத்திற்கு எவ்வாறு வந்து சேர்ந்தன, எனும் கேள்வியே ஒழுக்கவியலின் தேவையை முன்னிறுத்துகின்றது. ஒரு காலத்தில் ஆண்களிடமும், நகர்ப்புறங்களிலும் காணப்பட்ட போதைப்பழக்கம் இப்போது பெண் பிள்ளைகளிடத்திலும், கிராமங்களிலும் தீவிரமாகப் பரவி வருகிறது. இலங்கையில் தற்போது முகநூல் மூலம் ஏற்பாடு செய்யப்படும் விருந்துகள் இவர்களுக்கான ஆள்சேர்ப்புக்கும், போதைப்பொருள் பாவனைக்குமான களங்களாக அமைந்துவிடுவதை, அண்மையில் மருத்துவர் ஒருவரின் தகவல் மூலம் அறிய முடிந்தது. போதை பாவிப்பவர்கள், தங்களது சொந்தப் பயன்பாட்டிற்கு, நிதி பெறுவதற்கு அதன் வாடிக்கையாளராகவும், விற்பனையாளராகவும் காலப்போக்கில் திருடுபவர்களாகவும் மாற்றமடைந்து விடுகின்றனர்.

ஒருவரது நடத்தைக் கோலங்கள், சூழல், பழகும் நண்பர்கள் போன்றனவே ஒருவரது எதிர்கால வாழவைத் தீர்மானிக்கின்ற நிலையில் ஒழுக்கம் சார்ந்த நன்னடத்தைகளைக் கற்றுக் கொள்வதன் மூலமே இன்றைய உலகின் மிகப்பெரும் சவாலான போதையின் பிடியிலிருந்து இளைய சமுதாயம் மீள முடியும். அதற்கான வழிகளை நாமும் சொல்லிக் கொடுப்பதன் மூலம் இப்புவியில் நாம் வந்தடைந்ததன் முழுமையான பயனை அடைவோமாக.

- ஜனனி வேணுகானன் -
(கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்,
நல்லூர் பிரதேச செயலகம்)

# பதிகமும் பொழிப்பும்

**பாடல் - 07**

கூறுகொண்டாய் மூன்றுமொன்றாக் கூட்டியோர்வெங் கணையால்
மாறுகொண்டார் புரமெரித்த மன்னவனே கொடிமேல்
ஏறுகொண்டாய் சாந்தமீதென் றெம்பெருமா னணிந்த
நீறுகொண்டார் இடர்களையாய் நெடுங்களம்மே யவனே.

**பொருள் :-**

உடம்பில் சரிபாதியாக கூறுபோட்டது போல் பிரித்து, ஆணும் பெண்ணும் சமம் என்பதை இந்த உலகுக்கு எடுத்துக்காட்டி, உமையம்மையை இணைத்துக் கொண்டவனே,அதுமட்டுமல்லாமல், தவசீலரான சிறுத்தொண்டரைச் சோதித்து அவரது ஒரே மகனைக் கூறு போட்டுச் சமைத்து, ஆள்கொண்டு, உன்னுடனேயே கொண்டவளே (சித்தர்வாக்கு) திருமாலை அம்பினது தண்டாகவும், வாயுபகவானை வால்பகுதி இறகாகவும், அக்கினிபக வானை நுனியாகவும் ஆக்கி வெங்கணையை ஏந்தினாலும் – புன்னகைகொண்டே தேவர்



களோடு மாறுபட்ட, தாரகாசுரனின் புதல்வர்களான தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி எனும் அசுரர்களின் பொன், வெள்ளி, இரும்புக் கோட்டைகளை எரித்து அழித்த அதே சமயம், தேவர்களின் ஆணவத்தையும் அழித்து அசுரர்கள் வேண்டிய வரத்தின்படி கணைகளைத் தொடுத்து அவர்களை மாய்த்து முக்தி கொடுத்தவனும், கொடியிலே எருது எனும் காளை மாட்டினைக் கொண்டவனும், அப்பனே! நீ அணியும் அந்த திருநீற்றினை நீரிற் குழைத்து, உடல் முழுவதும் சாந்து போல் பூசிக்கொள்ளும் பரிசுத்தமான மனம் கொண்ட அடியார்களின் இடர்களனைத்தும் களைந்து, நிம்மதியான வாழ்வை அருள் வாயப்பா! எம் இறைவனே! திருநெடுங்களம் வாழும் எம் தலைவனே! நமசிவாயனே! நாதனே!

**திருச்சிற்றம்பலம்**
**ஓவியமும் விளக்கமும்: பத்மவாசன்**
**(இந்து கலாசார திணைக்கள வெளியீட்டிலிருந்து)**

# தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது அவசியம்; புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுடன் பேசத் தயார்!

## விஜயதாஸ ராஜபக்ஷ பகிரங்க அறிவிப்பு



தமிழர்கள் மத்தியில் தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் உள்ளன என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். பேச்சுகளின் ஊடாகத் தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது அவசியமாகும், எதிர்கால தலைமுறையினருக்கு இந்தப் பிரச்சினைகளை மீதப்படுத்தக் கூடாது என்பதைத் தமிழ் அரசியல் தரப்பினர் விளங்கிக்கொள்ள வேண்டும். புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் தலைவர்களுடன் வெளிப்படைத் தன்மையுடன் பேச்சில் ஈடுபடத் தயார் என நீதி, சிறைச்சாலைகள் விவகாரம் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றில் புதன்கிழமை இடம்பெற்ற அவசர கால சட்டத்தின் மீதான விவாதத்தின்போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நாடு சுதந்திரம் பெற்றதன் பின்னர் மிகவும் நெருக்கடியானதொரு சூழ்நிலையில் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் அரசாங்கத்தைப் பொறுப்பேற்றுள்ளனர். எவ்வாறான பின்னணியில் அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டது என்பதை சகலரும் நன்கு அறிவார்கள்.

நாட்டு மக்கள் வீதிக்கு இறங்க முன்னர் சகல கட்சிகளையும் உள்ளடக்கிய வகையில் சர்வக்கட்சி அரசாங்கத்தை ஸ்தாபிப்போம் என்ற யோசனையை முன்வைத்தோம். இருப்பினும் அந்த யோசனையை அரசியல் கட்சிகள் ஏதும் ஏற்றுக்கொள்ளவில்லை.

சர்வக்கட்சி அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கு எதிர்க்கட்சி தலைவருக்கு சுதந்திர கட்சியின் தலைவர் ஊடாக அழைப்பு விடுத்தோம். இருப்பினும் எதிர்க்கட்சி அரசாங்கத்தை பொறுப்பேற்கவில்லை. மூன்று வாரத்துக்கு பின்னர் முன்னாள் ஜனாதிபதியிடம் அரசாங்கத்தை அமைக்கும் பொறுப்பை ஒப்படைத்தோம். அதனைத் தொடர்ந்தே தற்போதைய அரசாங்கம் அப்போது ஆரம்பமானது.

அரசமைப்பிற்கு அமைவாகவே செயற்பட்டோம், அரசமைப்பிற்கு முரணாக செயற்படும் போது விளைவு பாரதூரமானதாக அமையும். விருப்பத்துடன் அவசர கால சட்டம் கொண்டு வரவில்லை. நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பாக அனைவரும் அவதானம் செலுத்த வேண்டும். பாதுகாப்பைக் கருத்திற்கொண்டே அவசரகால சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. முப்படையினருக்கு எதிராக செயற்படும் போது அவர்கள் எவ்வாறு நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவார்கள். தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய தேவை காணப்படுகிறது.

சகல தரப்பினரது எதிர்பார்ப்பிற்கமைய கடந்த செவ்வாய்க்கிழமை அரசமைப்பின் 22 ஆவது திருத்தத்தை சபையில் சமர்ப்பிக்க எதிர்பார்த்தேன். இருப்பினும் ஒரு சில விடயங்கள் தொடர்பாக விமர்சனம் எழுந்துள்ளது. சகல தரப்பினரது இணக்கப்பாட்டிற்கமைய எதிர்வரும் வாரம் 22ஆவது திருத்த வரைவை சபைக்குச் சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளேன். 22 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து நாடாளுமன்றத் தெரிவு குழு ஊடாக புதிய அரசமைப்பை உருவாக்க அவதானம் செலுத்தியுள்ளோம்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களுக்கு காலம் காலமாக பல பிரச்சினைகள் உள்ளன என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். நல்லாட்சி அரசாங்கத்தில் நீதியமைச்சராக பதவி வகிக்கையில் பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண உரிய நடவடிக்கையை முன்னெடுத்தேன். காணாமலாக்கப்பட்டோரது காரியாலயம் ஸ்தாபித்தோம். இருப்பினும் அதன் செயற்பாடு மந்தகரமாக உள்ளது. துரிதப்படுத்த ஆலோசனை வழங்கியுள்ளோம். நட்டஈடு வழங்கும் காரியாலயத்தின் செயற்பாட்டை விரிவுபடுத்தத் தீர்மானித்துள்ளோம்.

தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தினரை பிற இனத்தவர்கள் என ஒருபோதும் வேறுபடுத்தவில்லை. இலங்கையர்கள் என்ற நிலைப்பாட்டில் இருந்துகொண்டு ஒன்றிணைந்து செயற்படுகிறோம். புலம்பெயர் அமைப்புகளின் தலைவர்களைச் சந்தித்தேன், அவர்கள் இரகசிய பேச்சுகளை முன்னெடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்கள்.

இரகசியமாக பேச்சு தேவையில்லை, வெளிப்படைத் தன்மையுடன் பேச்சில் ஈடுபடுவோம் என்றேன். பல்வேறு காரணிகளால் அவர்கள் பிற நாடுகளில் வாழ்கிறார்கள். பிரச்சினைகளை மாத்திரம் கதைத்துக்கொண்டிருந்தால் ஒருபோதும் தீர்வு காண முடியாது. நாளைய சமூகத்தினருக்கு இந்தப் பிரச்சினைகளை மீதமாக்க வேண்டாம். நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், சுமந்திரன் உங்களிடம் குறிப்பிடுகிறேன். இந்தப் பிரச்சினைக்கு நாம் தீர்வு காண்போம்.

புலம்பெயர் அமைப்புக்களின் தலைவர்களுக்கு வெளிப்படைத் தன்மையுடன் பேச்சுக்கு அழைப்பு விடுத்துள்ளேன். நாட்டை முன்னேற்றுவோம். நாம் இலங்கையர்கள் என வெளிநாடுகளில் குறிப்பிடுகின்றமை வெட்கமாகவுள்ளது. பிரச்சினைகளுக்கு ஒன்றிணைந்து தீர்வு கண்டு கௌரவமான சமூகம் என்பதை உறுதிப்படுத்துவோம்.

பொருளாதாரத்தை மேம்படுத்துவதுடன், தேசிய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த வேண்டும். சாதாரண மக்களுக்கு எதிராக அவசரகால சட்டம் ஒருபோதும் செயற்படாது. சட்டத்துக்கு முரணாக செயற்படுபவர்களுக்கு எதிராகவே அவசரகால சட்டம் செயற்படும். சட்டத்துக்கமைய செயற்பட்டால் மாத்திரமே முன்னேற்றமடைய வேண்டும். – என்றார்.

## தொடக்கமில்லாத ............

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்றாலும், அன்று பிரதமராக இருந்த ரணில் புதிய அரசியல் சட்டம் மூலம் இனப் பிரச்சினைக்கான தீர்வையும் முன்னெடுக்க முயற்சி செய்தார் என்று கருத இடமிருக்கிறது. ஆனால், ரணில் – மைத்திரி – மஹிந்தா முக்கோண விளையாட்டில் இன்பிரச்சினை மீண்டும் ஒரு முறை சிக்கிக் கொண்டது. இது குறித்து அன்று ரணிலுடன் தீர்வு திட்டத்தை தயார் செய்த சுமந்திரன், இது குறித்து மேலும் அறிந்திருப்பார்.

இது மட்டுமல்ல. தற்போதைய அரசியல் நிலைமையில், அடுத்த நாடாளுமன்றம் மற்றும் ஜனாதிபதி தேர்தல்கள் அடுத்த ஆண்டு நடைபெறும் என்று கருத இடமிருக்கிறது. ரணிலுக்கான அதிகாரம் பெப்ரவரியில் வரும் போது, தற்போதைய நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டு, புதிதாக தேர்தல் நடத்த ஆணையிட வேண்டும் என்று அவர் மீது உள்நாடு மற்றும் சர்வதேச அழுத்தங்கள் கூடும். இல்லையென்றாலும், அதற்கு அடுத்த வருடம் நவம்பர் மாதத்தை ஒட்டி ஜனாதிபதி பதவிக்கும் நாடு தழுவிய தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

### மூன்றடுக்கு திட்டம்

நிலவி வரும் சூழலில், தமிழர் தரப்பு, அரசியல் தீர்விற்கான மூன்றடுக்கு செயல்முறை குறித்து சிந்திக்கலாம்.

முதலாவது, தற்போதைய பதின்மூன்றாவது திருத்தத்தை செயல்படுத்தி, அதன் அடிப்படையில், மாகாண சபை தேர்தல்களை நடத்துவது. நாடு முழுமைக்கும் இல்லை என்றாலும், வடக்கு மாகாணத்திற்கு மட்டுமாவது தேர்தல் நடத்தக் கோரலாம்.

ஆமாம், வடக்கு மாகாணத்திற்கு மட்டுமே தேர்தல் என்று கூறும் போது, வடக்கு – கிழக்கு இணைப்பு என்ற பதம் அடிபட்டு போய்விட்டது. காரணம், 1987 ஆம் ஆண்டு நாடாளுமன்றம், பதின்மூன்றாவது சட்ட திருத்தம் மற்றும் அதனை ஒட்டிய மாகாண சபை சட்டம் ஆகியவற்றை இயற்றிய போது இருந்த களநிலை அல்ல, இன்று கிழக்கு மாகாணத்தில் இருப்பது. எப்போது, 1990ஆம் ஆண்டு, விடுதலைப் புலிகள் இயக்கம், அடுத்தடுத்து வடக்கு – கிழக்கு முஸ்லிம் மக்களை தாக்கியதோ, அன்றே, இந்த இரண்டு இனங்களுக்கும் இடையேயான அரசியல் ஒற்றுமை காற்றோடு கரைந்து விட்டது. இது வரை அதனை ஒட்ட வைக்க இரு தரப்பிலும் எவரும் முயற்சி எடுக்கவில்லை.

இப்போது தமிழர் தரப்பு, மாகாண இணைப்பு என்ற கோரிக்கையை முன்வைத்தால், கிழக்கு மாகாண சிங்கள – முஸ்லிம் தரப்புகளை கைகாட்டி, தென்னிலங்கை, மொத்த தீர்வு திட்டத்தையும் மீண்டும் ஒரு முறை கை கழுவி விட்டுவிடும். இது, பதின்மூன்றிற்கு அப்பால் சென்று நேரடியான அரசியல் தீர்வு திட்டங்களுக்கும் பொருந்தும்.

பதின்மூன்றின் கீழான அரசியல் தீர்வைப் பெற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்திய பிறகு, புதிய ஜனாதிபதியின் கீழ், புதிய நாடாளுமன்றத்தின் மூலம், தமிழர் தரப்பு அடுத்த கட்ட தீர்வுகளுக்குள் காலடி எடுத்து வைக்கலாம். இடைப்பட்ட ஓராண்டு காலத்தில், அனைத்து தமிழர் தரப்புகளும், தற்காலத்தில் தாங்கள் எங்கு பிழை விட்டோம் என்று ஆத்ம பரிசோதனை செய்து, அவற்றிற்கு விடை காணலாம்.

அவற்றில் எல்லாம் முக்கியமாக, அனைத்து தமிழர் தரப்புகளும் ஒன்றாக ஒரே அணியில் இருந்து, தென்னிலங்கையுடன் சமருக்கு நிற்க முடியுமா என்பதை மீண்டும் ஒரு முறை பரிசோதித்துக் கொள்ள வேண்டும். அதற்கு முக்கியமான தேவை ஒன்று உண்டு. எந்தவொரு கட்சியும், தலைமையும், தலைவரும், தானே பெரியவன் என்று தலைக்கனம் கொண்டிராமல், பிரச்சினைகளை, தமிழர் ஒற்றுமையை அணுக வேண்டும்.

மூன்றாவது கட்டத்தில், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறுவது போன்றான, முழுமையான சமஷ்டி முறை குறித்து, அனைத்து தரப்புகளும் பிரஸ்தாபித்து பார்க்கலாம். அன்றை கால நிலை மற்றும் கள நிலைகளின் அடிப்படையில், ஒருங்கிணைந்த ஒரு செயல் திட்டத்தை முன்னெடுக்கலாம். அதற்கு இடைப்பட்ட காலத்தில், கிழக்கில் வாழும் முஸ்லிம் மற்றும் சிங்கள மக்கள் அல்ல, அங்கே உள்ள தமிழர் தரப்புடனும் பேச்சு வார்த்தை நடத்தி, இரு மாகாண இணைப்பு குறித்து ஒரு முடிந்த முடிவிற்கு வரலாம்.

### கழுதை தேய்ந்து...

ஒன்றுமில்லை என்றாலும், கடந்த நாடாளுமன்றத் தேர்தலில், கிழக்கில், சம்பந்தன் மிக குறைந்த வாக்குகளே பெற்றிருந்தார். அது போன்றே கூட்டமைப்பின் எதிர்ப்புக்கும் அப்பால், பிள்ளையான் நாடாளுமன்றத்திற்குத் தேர்வு பெற்றிருந்தார். அவரையொத்த கூட்டமைப்பில் இல்லாத பிற தமிழ் கட்சி வேட்பாளர்களும், தேர்தலில் வெற்றி பெறவில்லை என்றாலும், குறிப்பிடத்தக்க அளவில் வாக்குகளை பெற்றிருந்தார்கள். அவர்கள் காரணமாகவும், தமிழர் அல்லாத இனத் தரப்புகளுக்கு அதிக ஆசனங்கள் கிடைத்தன.

அதாவது, எப்படி, நாட்டின் பிற பகுதிகளில் இருந்து வடக்கு மாகாண இன அரசியல் வேறுபட்டு நிற்கிறதோ, அது போன்றே கிழக்கு மாகாண தமிழர் அரசியலும் தனித்துவம்பெற்றதுஎன்பதையாழ்ப்பாணஅறிவுஜீவிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த உட்பிரிவுகள் காரணமாகவும், அதனால் தோன்றிய கட்டாயத்தாலும் மட்டுமே கருணாவால், விடுதலை புலிகள் இயக்கத்தை உடைப்பதற்கு அடிக்கோலிட முடிந்தது. இனப்போரில், அந்த இயக்கம் தோல்வியை தழுவியதற்கு, இதுவும் ஒரு முக்கிய காரணம்.

இனப்போர் முடிந்து பதிமூன்று ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. இந்த காலகட்டத்தில், தமிழர் தரப்பு, கழுதை தேய்ந்து கட்டெறும்பாகி விட்டது. இனி உள்ள காலங்களில், அந்த கட்டெறும்பு, சிற்றெறும்பு ஆகி, காணாமலே போய்விடும். அந்த நாளை குறிவைத்து தான், தென்னிலங்கையின் அரசியல் தரப்புகள் கடந்த காலத்தில் காய் நகர்த்தி வந்தன.

ஆனால், இன்றோ, தென்னிலங்கையின் முக்கிய கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சியும், சுதந்திர கட்சியும் காணாமலே போய்விட்டன. இது இரண்டுமே, ஐந்து ஆண்டுகளுக்குள் நிகழ்ந்தன. இதிலும் தமிழர் தரப்பிற்கு ஒரு பாடம் உள்ளது. இன்று, மொட்டு கட்சியும், சஜித் கட்சியும் களத்தில் நிற்கின்றன.

ஜனாதிபதி ரணிலின் ஒரு குறி, சஜித்தை காணாமல் ஆக்கி விட்டு ஐக்கிய தேசிய கட்சியை மீண்டும் உயிர்ப்பிப்பது. அதில் அவர் ஓரளவேனும் வெற்றிபெற்று விட்டால், அதன் பின்னர். தமிழர் வாக்கு வங்கியே அவரது அடுத்த குறியாய் இருக்கும். அது தமிழ் கட்சிகளில் ஊடாக இருந்தால் நலம். இல்லை என்றால் அதற்கும் அவரது ஐக்கிய தேசிய கட்சி தயாராய் இருக்கும். அதற்கு எதிர் அணியில், முன்னணி சோஷலிசக் கட்சி போன்ற ஏதாவதொரு இடதுசாரி கட்சி முன்னிலைப்படுத்தப்படும். அவற்றிற்கிடையே தமிழர் அரசியல் காணாமல் போனால், யாரும் ஆச்சரியமடைய கூடாது.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



## அங்கம்-76

### ஜே.வி.பியின் தலைவர்கள்

றோஹண விஜேவீர கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் டாக்டர் எஸ்.ஏ.விக்ரமசிங்கவின் சார்பில் ரஷ்யாவின் பற்றிஸ் லுமும்பா பல்கலைக்கழகத்தில் மருத்துவம் படிக்கச் சென்று அங்கு சந்தித்த மார்க்சிய சித்தாந்தவாதிகளினால், இந்த நாட்டு மக்களுக்கான தனது சேவை




மருத்துவத்தில் இல்லை, அடக்கப்பட்ட – ஒடுக்கப்பட்ட மக்களை முதலாளித்துவ ஆட்சிக் கட்டமைப்பிலிருந்து விடுதலை பெற்றுக் கொடுப்பதுதான் தமது லட்சியம் என்ற கனவோடு நாட்டுக்குத் திரும்பினார்.

அவர் ரஷ்யா போகும்போது கம்யூனிஸ்ட் கட்சி மாஸ்கோ அணி, சீன அணி எனப் பிரியவில்லை. அந்தத் தத்துவார்த்தங்கள் அவர் ரஷ்யாவில் வசித்த பொழுதுதான் தொடங்கின.

நாடு திரும்பியதும், மாஸ்கோ அணியின் விக்கிரமசிங்கவின் சிபாரிசில்தான் படிப்புக்காக மாஸ்கோ சென்றிருந்தாலும் அந்த நன்றியுணர்வுக்கு ஆள்படாமல், கொள்கைரீதியில்சீனஅணியில்இணைந்தமையால் ரஷ்யாவுக்கு மீளச் செல்ல அவருக்கு விஸா தரப்பட வில்லை.

அதேபோல் இளைஞர் மாநாடு ஒன்றுக்கு கியூபா சென்றிருந்தபோது ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோவை சந்திக்க அவர் விரும்பியும் மாஸ்கோ அணி பின்னணியில் இருந்து கியூபாவின் தூதுவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களால் அது சாத்தியப்படவில்லை என்ற செய்திகளும் உண்டு.

விஜேவீர மக்களை வசீகரிப்பதில் திறமையுள்ளவர். நல்ல பேச்சாளர். உறுதியானவர். மேடைப் பேச்சுகளில் வசீகரம் மிக்கவர். திட்டங்களுக்கான யோசனைகளை முன்வைப்பதிலும் அவற்றை தீட்டுவதற்கு எடுக்கும் லாவகங்களிலும் அவரைத் தொடர்ந்த இளைஞர்களுக்கு ஒரு நம்பிக்கை கொடுத்து அவர்தான் ஜே.வி.பியின் அச்சாணியாக இயங்கினார். ஜே.வி.பி. முத்திரையாக விஜேவீர பார்க்கப்பட்டும் மதிக்கப்பட்டும் இருந்தாலும் கட்சியின் பொது காரியதரிசியாக இருந்த லயனல் போபகேதான் அதன் நிர்வாகப் பொறுப்புக்களை ஏற்று நடத்தினார். இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் படித்து 1969இல்பட்டதாரியாகவெளியேறியவர். ஆழமாக நிதா னித்துத் தீர்மானங்கள் எடுப்பதிலும், பொறுமையாகக் காரியம் ஆற்றுவதிலும் வல்லவர் என்ற நம்பிக்கைகளை தோழர் களிடையே வளர்த்தவர். விஜேவீரா போலவசீகரமான மேடைப் பேச்சாளர் அல் லர். அதேபோல விஜேவீராடம் இருந்த துடிதுடிப்பு, நினைப்பதை உடனே முடித்து விட வேண்டும் என்று அவசரத் தன்மைகள் இவரிடம் இருக்க வில்லை. விஜேவீரா கட்சியின் பொது முகமாகவும், போபகே அதன் அத்திவாரமாகவும் இயங்கினார்கள். இருவரதும் இந்தப் பின்னணிகள் பின் எழுந்த நிலைப்பாடுகளை உணர்ந்து கொள்ள உதவும்.

இருவரும் நீண்ட காலக் கனவுகளோடு சிறைக்கு அனுப்பப்பட்ட வேளையில் சிறைவாச காலங்களில் தன் கூட இருந்த தமிழ் மாணவர் பேரவை, இளைஞர் பேரவை அங்கத்தினர்களுடன் போபகேக்குத் தொடர்புகள் ஏற்பட்டன. அவர்களது பின்னணிகளையும், நோக்கங்களையும், இலட்சியங்களையும் அறிந்து கொண்டு இளைஞர் பேரவையின் புஷ்பராஜாவுடனும் அவரது நண்பர்களுடனும் நட்புகளை வளர்த்து, அக்காலங்களில் இயங்கிய பலபேரைச் சந்தித்து வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் பின்னணியில் இருந்த இளைஞர்களின் போராட்ட சக்தி, அவர்களது கோரிக்கைகளை உணர்ந்து கொண்டு, சிறையில் இருந்த போது 'தேசிய இனப் பிரச்சினை தொடர்பில் ஒரு மார்க்சியவாதியின் பார்வை' என்ற கட்டுரையை வெளியிட்டார் போபகே.

ஆனால் அதனை அவரின் தோழர்கள் படிக்கவும் இல்லை, கணக்கெடுக்கவும் இல்லை. எனினும் போபகே தனது தொடர்புகளைரத் தமிழ் போராளிகளிடையே பேணிக் கொண்டார்.

### ஜே.ஆர். தந்த விடுதலை

1977 – இல் தேர்தலில் வெற்றி பெற்ற ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ஜே.வி.பி. தங்களுக்கு ஆதரவு தரப்போவதில்லை என்றாலும், விடுதலை அளித்தால் அவர்கள் தங்கள் அமைப்பை ஒடுக்கிய சிறிமாவுக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் எதிராக, அவர்களைப் பழிவாங்க இயங்குவார்கள் எனக் கணித்து, பொது மன்னிப்பில் சிறையிலிருந்த ஜே.வி.பி. அங்கத்தினர்கள் யாவரையும் விடுதலை செய்தார். அவர்கள் வன்முறையை நாடக் கூடாது, அரசியல் கட்சியைப் பதிந்து இயங்கலாம், ஆனால் வன்முறை புகுந்தால் பாரதூரமான விளைவுகளும், பயங்கரவாத தடைச் சட்டங்களும் அவர்களுக்கு எதிராகப் பாயும் என்று அறிவுறுத்தல்களும் தரப்பட்டன.

அவர்களது ஆதரவாளர்கள், அங்கத்தினர் பலர் கொல்லப்பட்டு விட்டமையால் விடுதலை பெற்ற இவர்கள் சமூகத்தில் உள்வாங்கப்பட்டு, துளிர் விட எந்தவித அத்திபாரங்களும் இல்லாது தவித்தார்கள். புதிய ஆதரவாளர்களையும் நம்பிக்கை வைக்கக் கூடிய அங்கத்தினர்களையும் தேட வேண்டி இருந்தது. தமிழ் விடுதலைப் போராளிகள் கூட கரந்துறைந்து, பணவசதியோ இருப்பிடங்களோ இன்றி அலைந்தார்கள். ஜே.வி.பிக்கு எதிராக நடத்தப்பட்டவற்றுக்காக மக்கள் அவர்களுக்கு ஆதரவாகவும் அனுதாபமாகவும் இருந்தாலும், பயங்கள் காரணமாக வெளிப்படையாக அவர்களுடன் சேர்ந்து கொள்ளத் தயக்கம் காட்டினார்கள். அப்படியான ஆதரவுகளைத் தேடி ஜே.வி.பி. மக்களுடன் இணைந்த ஓர் அத்திவாரத்தில் அருகம்புல் மாதிரி பரந்து படரவே போபகே விரும்பி அதற்கான திட்டங்களை தயாரித்தார். சிங்கள இளைஞர்களை மட்டும் கொண்ட அமைப்பாக இல்லாமல், மற்ற இனத்தவர்கள், மதத்தவர்கள் இடையேயும் ஆதரவுக் கரங்களை நீட்டி தாங்கள் மக்களோடு இணைந்து, அவர்களோடு அவர்களின் கஷ்ட நஷ்டங்களில் பங்கு பற்றினால்தான் உண்மையான நம்பிக்கை வளரும் என நம்பினார். ஆதலால் இனப் பிரச்சினையால் அல்லல்படுபவர்கள் அவருக்கு முக்கியமானவர்கள் ஆனார்கள்.

ஜே.வி.பி. அரசியல் கட்சியாகப் பதியப்பட்டது. ஆகவே அந்தத் தருணங்களைப் பாவித்து கூட்டங்களால் மக்களுக்குத் தங்களது கொள்கைகளைப் பரப்ப வேண்டும் என்ற திட்டங்களை விஜேவீரா முன் வைத்தார்.

இரண்டுக்குமே அவர்களிடம் பணவசதி இல்லை. ஒருவேளை சாப்பாட்டுக்கே தலையை சொறிந்தவர்கள், மேடை அமைத்து, அரசியல் பிரச்சார கூட்டங்களை நடத்துவது எப்படி? அவர்கள் எதிர்கொண்டவைகளை முருக பூபதி நூலில் இருந்து அவரது வார்த்தைகளிலேயே தருகிறேன்:–

"அழிக்கப்பட்ட ஓர் அரசியல் இயக்கத்தை வளர்ப்பதற்கு அவர்களிடம் நிதி இருக்கவில்லை. போதிய வளங்களும் இல்லை. சிறையில் அவர்கள் இருந்த போது இயற்றிப் பாடிய விடுதலை கீதங்களை மேடைகள் அமைத்துப் பாடினார்கள். உண்டியல் குலுக்கினர். துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டனர். வண்ண வண்ண சுவரொட்டிகளில் தங்களது கொள்கைகளைப் பதிவு செய்தனர். தாம் ஜனநாயகப் பாதையில் மக்களிடம் வந்திருப்பதாகச் சொல்லிக் கட்சியையும் பதிவு செய்தனர். அவர்களுக்கு ஒரு அலுவலகம் தேவைப்பட்டபோது அதற்கு உதவுவதற்கு ஒரு சிங்கள இளைஞர் முன்வந்தார். அவரிடத்தில் கொழும்பு ஆமர் வீதியும் ப்ளூ மெண்டல் வீதியும் சந்திக்கும் முச்சந்தியில் ஒரு மர ஆலை இருந்தது. அங்கு பெரிய மரங்களை அரிந்து விற்கும் தொழிற்சாலை இயங்கியது. நாடெங்கும் தங்களது பிரசாரக் கூட்டங்களை நடத்தினார்கள். பஸ்களிலும் ரயில்களிலும் பயணித்து, கூட்டங்களில் பேச வந்திருக்கும் இக்கட்சியின் தலைவர்களும் உறுப்பினர்களும் எளிமையாகவும் சிக்கனமாகவும் வாழ்ந்தனர். குறிப்பிட்ட மர ஆலையில் அமைந்த கட்சி காரியாலயத்தில் செங்கொடிகள் தரையில் விரித்துப் படுத்து உறங்கியும், சாப்பாட்டுக் கடைகளிலும் கட்சி தோழர்களின் வீடுகளில் இருந்தும் பார்சல் உணவு வாங்கி வந்து பகிர்ந்தும் வாழ்க்கையை சுதந்திரமாகத் தொடர்ந்தனர். களனி கங்கை ஓரத்தில் கொகிலவத்த என்ற பிரதேசத்தில் அச்சகம் அமைத்து, அங்கிருந்து நியமுவா, செஞ்சக்தி, ரத்து பலய, Red Power முதலான பத்திரிகைகளை வெளியிட்டனர். 'விடுதலை கீதம்' என்ற தலைப்பில் நாடெங்கும் இசை நிகழ்ச்சிகளை நடத்தி மக்களின் ஆதரவைத் திரட்டினர். கட்சி ஆதரவாளர்களின் வீடுகளில் தினமும் உணவு சமைக்கும் போது "ஒரு சுண்டு அரிசியை வேறாக எடுத்து வைத்து, சேமித்துத் தருமாறு கோரிக்கை விடுத்து, அடிமட்டத்திலிருந்து கட்சியை வளர்த்தெடுத்தனர் வண்ண வண்ண சுவரொட்டிகள் மூலம் மக்களைக் கவர்ந்தனர்."

(தொடரும்)

